www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

மலர் 87 இதழ் 46 | 2025 பிப்ரவரி 16 - பிப்ரவரி 22 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

## தமிழ்நாட்டைப் புறக்கணித்து, மக்களை வஞ்சித்துள்ள

# ஒன்றிய பட்ஜெட் நகல் எரிப்புப் போராட்டம்

### மக்கள் விரோத நிதிநிலை அறிக்கை: டி.ராஜா குற்றச்சாட்டு




**தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழக மக்களை வஞ்சித்துள்ள ஒன்றிய அரசின் மக்கள் விரோத பட்ஜெட்டை கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகர்களில் பட்ஜெட் நகல் எரிப்புப் போராட்டத்தை எழுச்சியோடு நடத்தியது.**

சென்னையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தலைமையில் சென்னை பூக்கடை அருகே, பிஎஸ்என்எல் அலுவலகம் எதிரில் பட்ஜெட் நகல் எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. அகில இந்தியப் பொதுச்செயலாளர் டி.ராஜா தொடங்கி வைத்தார். இந்தப் போராட்டத்தில் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாவட்டச் செயலாளர்கள் தா.கு.வெங்கடேசன், பா.கருணாநிதி, எஸ்.கே.சிவா, மாநில நிர்வாக குழு உறுப்பினர் கண்ணகி, மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் க.இப்ராகிம், மாநிலச் செயலாளர் பா.தினேஷ் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

போராட்டத்தை தொடங்கிவைத்துப் பேசிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா, “ஒன்றிய அரசு தாக்கல் செய்துள்ள இந்தப் பட்ஜெட் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழக மக்களை வஞ்சித்துள்ளது. ஏழை, எளிய மக்களுக்கு விரோதமானது” என்று குற்றம்சாட்டினார்.

“நாட்டில் இதுவரை இல்லாத அளவுக்கு வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துள்ளது. விலைவாசி பன்மடங்கு உயர்ந்துள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது. பணவீக்கம் உயர்ந்துள்ளது. ரூபாய் மதிப்பு இதுவரை இல்லாத அளவுக்கு மிக மோசமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இதுபோன்ற இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படை பிரச்சினைகளை எந்த வகையிலும் இந்தப் பட்ஜெட் தொடவில்லை. எனவே, இதைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் பட்ஜெட் நகல் எரிப்புப் போராட்டம் நடைபெறுகிறது.

காப்பீட்டுத் துறையில் இன்றைக்கு 100 விழுக்காடு அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்படுகிறது. விண்வெளி ஆராய்ச்சித் துறையில் தனியார் பங்களிப்பு அனுமதிக்கப்படுகிறது. இதன் மூலம், அனைத்துத் துறைகளும் தனியார் மயமாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்கு உயர்த்துவோம் என பிரதமர் மோடி வாக்குறுதி அளித்தார். ஆனால், விவசாயிகள் கடன் தொல்லையால் தற்கொலை செய்து வருகின்றனர். விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு சட்ட ரீதியான குறைந்தபட்ச ஆதார விலையை வழங்க வேண்டும் என்று போராடுகிறார்கள். ஆனால், அது கொடுக்கப்படவில்லை.

ஒன்றிய அரசுக்கு தமிழ்நாட்டில் இருந்து அதிக அளவிலான ஜிஎஸ்டி வருவாய் செல்கிறது. ஆனால், தமிழ்நாடு அரசு நிதி கேட்கும் போதெல்லாம் ஒன்றிய அரசு அதைத் தர மறுக்கிறது. தமிழ்நாட்டுக்கு எதிராக பல்வேறு முடிவுகளையும் ஒன்றிய அரசு எடுத்து வருகிறது” என்றும் பொதுச்செயலாளர் டி.ராஜா குற்றம்சாட்டினார்.

### சிவப்புத் துண்டு பேரன்பின் வெளிப்பாடு

சென்னையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தோழர்களும் பட்ஜெட் நகலை எரித்தனர். அதை அணைக்க ஓடி வந்த காவலர் ஊற்றிய தண்ணீர் இன்னொரு காவலர் உடையில் பட்டுத் தெறித்தது. இதனால் நனைந்துவிட்ட அந்தக் காவலரைக் கண்ட தோழர் முத்தரசன், தனது சிவப்புத் துண்டால் அந்தக் காவலரின் உடையில் பட்ட தண்ணீரைத் துடைத்து விட்டார். சிவப்புத் துண்டு அடக்குமுறையை எதிர்ப்பதற்கு மட்டும் அல்ல, அன்பை வெளிப்படுத்துவதற்கும்தான்.

### நாட்டை ஆள்வதற்கு தார்மீக உரிமை இல்லை!
**கே.சுப்பராயன் எம்பி**

நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த 10 ஆண்டுகளில், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு எவ்வளவு சலுகைகள் மற்றும் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன? அந்த கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை நீங்கள் எவ்வாறு தள்ளுபடி செய்தீர்கள்? கார்ப்பரேட் வரி எவ்வளவு குறைக்கப்பட்டுள்ளது?

... பக்கம் 3

### டெல்லி: இன்னொரு பாடம்!
**தலையங்கம்**

மகாபாரதக் கதையில் கர்ணனைக் கொல்ல, போர் துவங்கும் முன்பாகவே திட்டமிட்ட சதிகள் மூலம் அவனைப் பலவீனப்படுத்தியதைப் போல, ஆம் ஆத்மி கட்சியைத் தனது ஆள் பலம், பண பலம், அதிகார பலத்தைக் கொண்டு பிஜேபி சிதைத்துக் கொண்டே வந்தது.

... பக்கம் 4

### அமைதியைக் குலைப்பவர்களை துணிவுடன் அடக்க வேண்டும்
**தி.லஜபதி ராய்**

கடந்த 12.12.2024 ஆம் நாள் இதே போன்று ஐந்து மசூதிகள் தொடர்பான வழக்குகளில் உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவுப்படி இந்தியா முழுமையிலும் ஒரு வழிபாட்டுத் தலத்தை மாற்ற எவ்வித வழக்குகளும் தாக்கல் செய்ய இயலாது.

... பக்கம் 7

### ஆளுநர் : கட்டமைக்கப்படும் கற்பனைக் கடமைகள்
**மே.து.ரா.**



ஆளுநருக்கும் முதல்வருக்கும் இடையில் எத்தகைய பூசலும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதே முழுமையாக மனதில் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அரசமைப்பு அவை உரைகள் வெளிப்படுத்துகின்றன.

... பக்கம் 8-9

குறைந்த பட்ச ஆதார விலையை 50% உயர்த்திட...
காவிரி நதி நீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு கண்டிட...
தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின்
தமிழ்நாடு மாநில 27வது மாநாடு
பிப். 20,21
அணி திரள்வீர்
தஞ்சையில்

கட்சிக் கடிதம்

# அராஜகம் அழிய வேண்டும்!



போர்க்குணமிக்க தோழர்களே!

**ஜனநாயகப் போர்வையை மிகக் கெட்டியாகப் போர்த்திக் கொண்டு, ஜனநாயகம் என்கிற பெயரிலேயே, அராஜகம் நடைபெற்றுக் கொண்டுள்ளது.**

அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கியதே ஒன்றிய அரசு. அவ்வரசு நிதிநிலை அறிக்கையினை ஆண்டுதோறும் முன்வைக்கிறது.

நாடு விடுதலை பெற்ற பின்பு, நேருவின் தலைமையிலான ஆட்சி, நாட்டை மேம்படுத்த ஐந்தாண்டுத் திட்டங்களையும், அதனைச் செயலாக்கத் திட்டக்குழுவையும் உருவாக்கி, அக்குழுவின் மூலம், நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களும் சீரான வளர்ச்சியைப் பெற வேண்டும் என்கிற முறையில் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தி வந்தது.

மோடி பிரதமராகப் பொறுப்பேற்ற பின்னர், முதல் பணியாக ஐந்தாண்டுத் திட்டக் குழு கலைக்கப்பட்டது.

நாடு முழுவதும் வசூல் செய்கின்ற வரியை ஒன்றியத்தில் குவித்து வைத்துக் கொண்டு, தன்னுடைய சொந்த விருப்பத்தின் பேரில், மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

நமது அரசியலமைப்புச் சட்டம் வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கி உள்ளது.

அரசியல் கட்சிகள், அமைப்புகள், தொழிற்சங்கங்கள் என உருவாக்கவும், செயல்படுத்தவும் அரசியலமைப்புச் சட்டம் வழிகாட்டுகின்றது.

இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் தான் விரும்புகிற கட்சியில் சேரவும், செயல்படவும் வழிவகை செய்யப்படுவது மட்டுமல்ல, தான் விரும்பும் கட்சிக்கு அல்லது போட்டியிடும் வேட்பாளருக்கு வாக்களிக்க உரிமை வழங்குகின்றது.

அத்தகைய உரிமைகள் அரசியலமைப்புச் சட்டத்தால் வழங்கப்பட்ட உரிமைகளாகும். அத்தகைய உரிமையைப் பறிப்பதற்கு, எவருக்கும் உரிமை கிடையாது.

ஆனால் அத்தகைய மகத்தான உரிமையை மோடி அரசாங்கம் கொஞ்சமும் கூச்சநாச்சமின்றிப் பறிக்கின்றது.

தனது கட்சிக்கு அல்லது தான் ஆதரிக்கும் கட்சிக்கு மக்கள் ஆதரவளித்திடல் வேண்டும். தான் ஆதரிக்கின்ற கட்சிக்கு, வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்று எழுதப்படாத சட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றார் மோடி.

தனது கட்சியோ அல்லது தான் அங்கம் வகிக்கும் கூட்டணியோ மாநிலத்தில் ஆட்சியில் இல்லை என்றால், அத்தகைய மாநில மக்களைப் பழி வாங்குவேன் என்று அச்சுறுத்தி வருகின்றார் திருவாளர் மோடி.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, மேற்குவங்கம், தெலுங்கானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் பாஜக அல்லாத கட்சிகள் ஆட்சியில் உள்ளன.

இம்மாநிலங்களைப் பழிவாங்கியே தீருவேன் என்று சபதமிட்டுச் செயல்பட்டு வருகிறது ஒன்றிய அரசு.



குறிப்பாக தமிழ்நாடு தொடர்ந்து ஒன்றிய அரசால் புறக்கணிக்கப்பட்டு வருகிறது

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு என்கிற பெயர்கூட இடம் பெறவில்லை.

தமிழ்நாடு தொடர்ச்சியாக இயற்கைச் சீற்றத்தால் ஆண்டுதோறும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

விவசாயம் அழிந்து, விவசாயிகள் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகின்றது. பாடுபட்டு உருவாக்கிய நெல், கரும்பு, சோளம் என அனைத்துப் பயிர்களும் அழிகின்றன.

சாகுபடி செலவிற்கு பெற்ற கடனைத் திரும்பச் செலுத்திட முடியவில்லை. ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 30,000 வரை பெரும் நட்டம் ஏற்படுகிறது.

விவசாயிகளின் வாழ்வாதாரம் முற்றிலும் அழிந்து நிர்க்கதிக்குத் தள்ளப்படுகிறார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட பெரும் இழப்பை யார் ஈடு செய்வது?

விவசாயம் மட்டுமல்ல, ஏழை எளிய மக்களின் குடிசை



வீடுகள் பெரும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு, மக்கள் நட்ட நடுவீதியில் நிற்க வேண்டிய கொடிய அவலத்திற்குத் தள்ளப்படுகின்றனர். இவர்களுக்கான வாழ்வாதாரத்தை யார் அளிப்பது?

விவசாயம், வீடுகள் மட்டுமல்ல, சாலைகள், மின்சாரம், அரசு கட்டிடங்கள் என அனைத்தும் பெரும் சேதத்திற்கு உள்ளாகி இருக்கின்றன. அவை அனைத்தையும் புதுப்பித்து, பழைய நிலைக்குத் திரும்ப பல ஆயிரம் கோடி ரூபாய்கள் தேவைப்படுகின்றன. இதனை எவ்வாறு ஈடு செய்வது?

தேசியப் பேரிடர் நிதி என்று ஒன்றிய அரசின் வசம் குவிந்து கிடக்கின்றது. அந்நிதி என்பது பேரிடரால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு, மக்களுக்கு வழங்குவதற்குத்தான். ஆனால் அவற்றைத் தர முடியாது என்று ஒன்றிய அரசு கூறினால், தர மறுத்தால் அதற்குப் பெயர் என்ன?

இயற்கைச் சீற்றத்தால் விவசாயம், வீடுகள், சாலைகள், கட்டிடங்கள், மின்சாரம் உள்ளிட்ட அனைத்தும் பாதிக்கப்படுவதுடன், விலைமதிக்க முடியாத மனித உயிர்கள் பலியாகின்றன. அத்தகைய குடும்பங்களைக் காப்பது யார்? கால்நடை இழப்புகளை ஈடு செய்வது யார்?

ஒன்றிய அரசுக்கு எவ்விதப் பொறுப்பும் இல்லையா? தமிழ்நாடு என்றால் பேரிடர் நிதி வழங்க மாட்டேன். உ.பி என்றால் மட்டும் அள்ளித் தருவேன் என்பது எத்தகைய ஜனநாயகம்?

வேளாண் தொழில் எந்திரமயமாகிவிட்ட நிலையில், இதனைச் சார்ந்து நம்பியுள்ள நாடு முழுவதும் உள்ள 8 கோடி கிராமப்புறத் தொழிலாளர்களுக்கு, ஒரு வேளை கஞ்சிக்காவது வழிவகை செய்வதுதான் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்புத் திட்டம். இச்சட்டம் நிறைவேற்றப்பட்டு 20 ஆண்டுகள் ஆகின்றன.

மோடி ஆட்சிக்கு வந்த பின்னர், இத் திட்டத்திற்கான நிதி ஆண்டுதோறும் குறைக்கப்படுவது மட்டுமல்ல, ஒவ்வொரு ஆண்டும் பயனாளிகள் எண்ணிக்கை குறைக்கப்பட்டே வருகின்றது.

ஏழைகளின் வலியை உணர்ந்த பிரதமர் மோடியின் சாதனை இது?

தமிழ்நாட்டில் கடந்த சில மாதங்களாக இப்பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படாமல் உள்ளது. ஒன்றிய அரசு இத்திட்டத்திற்கான நிதி ஏறத்தாழ 1200 கோடிக்கு மேல் வழங்காமல் உள்ளன.

இதேபோன்று கல்விக்கு வழங்க வேண்டிய தொகை ரூ. 2152 கோடியை ஒன்றிய அரசு வழங்க மறுத்து வருகின்றது. மறுப்பது மட்டுமல்ல தமிழ்நாட்டுக்கு ஒதுக்கிய நிதியை குஜராத்துக்குக் கொடுக்கிறது.

நாட்டில் ஜிஎஸ்டி மூலம் அதிக நிதி வழங்கி வருவது தமிழ்நாடு என்பது எல்லோரும் அறிந்ததே!

அத்தகைய மாநிலம் பல்வேறு வகையாலும் வஞ்சிக்கப்படுகின்றது. நிதி கேட்டால் ஒன்றிய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஸ் கோயல் கூறுகின்றார் “வரி கொடுக்குறோம், எங்களுக்கு நிதி கொடுங்கள் என்று கேட்பது, அற்பத்தனமானது” என்று கூறுகின்றார்.

நிதி கேட்பது அற்பத்தனம் என்றால் மறுப்பது அயோக்கியத்தனம் அல்லவா?

ஒன்றிய அரசின் நடவடிக்கை என்பது, என்னை ஆதரிக்க வேண்டும். எனக்கு ஓட்டுப் போட வேண்டும், என் கட்சியின் ஆட்சியை தமிழ்நாட்டில், தமிழக மக்கள் அமைக்க வேண்டும். இதனை மறுத்தால், பழிவாங்குவேன் என்று சொல்லாமல் சொல்லுகின்றார்!

அரசியலமைப்புச் சட்டம் மக்களுக்கு வழங்கியுள்ள உரிமையைத் தனது ஆட்சியின் மூலம் அப்பட்டமாகப் பறிக்கின்றார்!

ஜனநாயகப் போர்வையில், இத்தகைய அராஜகத்தை மோடி மேற்கொள்கிறார்!

இவர்களுக்கு இத்தகைய அதிகாரத்தை யார் வழங்கியது?

யாரும் வழங்கவில்லை. இவராகவே எடுத்துக் கொள்கிறார்?

இதற்குப் பெயர்தான் சர்வாதிகாரம்! பாசிசம்!

இத்தகைய சர்வாதிகாரத்தை முறியடிக்க, முளையிலேயே கிள்ளி எறிந்திட ஆயத்தமாவீர்! அணிவகுப்பீர்!

மீண்டும் சந்திப்போம்,

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# நாட்டை ஆள்வதற்கு இந்த அரசுக்கு தார்மீக உரிமை இல்லை!

## நாடாளுமன்றத்தில் கே.சுப்பராயன் எம்பி சாடல்

**10.02.2025 அன்று மக்களவையில் மத்திய பட்ஜெட் மீதான பொது விவாதத்தில் பங்கேற்ற கே.சுப்பராயன் எம்.பி. ஆற்றிய உரை:**



இந்த பட்ஜெட் மக்களின் நலனை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக, இது கார்ப்பரேட் நிறுவனங்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்ட பட்ஜெட். இந்த நாட்டின் செல்வத்தை உருவாக்குபவர்களான தொழிலாளர்களும் விவசாயிகளும் இந்த பட்ஜெட்டில் மிகவும் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

அதே நேரத்தில், இங்கு விரிவாகப் பேசுவதற்கு நேரமின்மை உள்ளது. ஒதுக்கப்பட்ட ஒன்று அல்லது இரண்டு நிமிடங்களுக்குள் என்னால் விரிவாக விளக்க முடியாது. விரிவாகப் பேச வேண்டுமென்றால், ஒரு வருடத்தில் பல நாடாளுமன்ற அமர்வுகள் இருக்க வேண்டும். வருடத்திற்கு 135 அமர்வுகளைக் கொண்ட நாடாளுமன்றம், இப்போது வருடத்திற்கு 55 நாட்கள் மட்டுமே கூடுகிறது. இது நமது ஜனநாயகத்தை சிலுவையில் அறைவது போன்றது. நீங்கள் இவ்வாறு செய்வதை நிறுத்த வேண்டும். ஆனால் எதிர்க்கட்சிகளுக்கு அதிக வாய்ப்புகளை வழங்க வேண்டும். அப்போதுதான் இந்த மகத்தான அவையில் விரிவாக விளக்க முடியும் என்பதை நான் கூற விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டில்,பீகாருக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதில் தமிழ்நாட்டிற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் கேள்வி என்னவென்றால், தமிழ்நாடு ஏன் புறக்கணிக்கப்பட வேண்டும் என்பதுதான். தமிழ்நாடு ஏன் புறக்கணிக்கப்படுகிறது என்பதை நிதியமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும்.

குறிப்பாக எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களை இந்த மத்திய அரசு புறக்கணிக்கிறது. நீங்கள் இந்த மாநிலங்களை குறிவைத்து அழிக்கிறீர்கள். டெல்லி தேர்தலில் நீங்கள் பெற்ற வெற்றி நிரந்தரமானது அல்ல. இந்த வெற்றி தற்காலிகமானது. எதிர்க்கட்சியில் பிளவு உங்கள் வெற்றிக்கு வழிவகுத்தது. நீங்கள் சில முறைகேடுகளில் ஈடுபட்டிருக்கலாம். உங்கள் இந்த வெற்றி என்றென்றும் நிலைக்காது என்பதை நான் கூற விரும்புகிறேன்.

பட்ஜெட்டில் திருக்குறள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த பட்ஜெட்டில் நீதியும் இல்லை, சட்டமும் இல்லை. அதேபோல் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை அதிகரிக்க நீங்கள் என்ன செய்கிறீர்கள்? ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு கொண்டு வந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை நீங்கள் வலுப்படுத்தியிருக்க வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை நீங்கள் அதிகரித்திருக்க வேண்டும். ஆனால் ஒதுக்கீட்டை ரூ. 89000 கோடியிலிருந்து ரூ. 86000 கோடியாகக் குறைத்துள்ளீர்கள். நீங்கள் எப்படியோ இந்தத் திட்டத்தைக் கைவிட விரும்புகிறீர்கள். மாறாக கிராமப்புற மக்களுக்கு வழக்கமான வேலைவாய்ப்பை வழங்குவதில் உங்களுக்கு அக்கறை இல்லை.

நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த 10 ஆண்டுகளில், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு எவ்வளவு சலுகைகள் மற்றும் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன? அந்த கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை நீங்கள் எவ்வாறு தள்ளுபடி செய்தீர்கள்? கார்ப்பரேட் வரி எவ்வளவு குறைக்கப்பட்டுள்ளது? இதனால் நமது அரசு கருவூலத்திற்கு என்ன இழப்பு ஏற்பட்டது? இந்த உண்மைகள் அனைத்தையும் இந்த மத்திய அரசு ஒரு ‘வெள்ளை அறிக்கை’ வடிவில் வெளியிட வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

அப்போதுதான் இந்த அரசு யாருக்காக ஆட்சியில் உள்ளது என்பது தெரியும்.

அதேபோல் பொதுத்துறை நிறுவனங்களை நீங்கள் தவறாக நிர்வகிக்கிறீர்கள். நீங்கள் எப்போதும் பண்டிட் ஜவஹர்லால் நேருவை குறை கூறுகிறீர்கள். அவர் பொதுத்துறை நிறுவனங்களை மக்களின் செல்வமாக எங்களிடம் விட்டுச் சென்றார். இந்த பொதுத்துறை நிறுவனங்கள் பொதுமக்களின் செல்வம். இந்த அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் முதலீடு செய்ய உங்களுக்கு எங்கிருந்து அதிகாரம் கிடைத்தது? இந்த மக்களின் நலனுக்கு எதிராக நீங்கள் எப்படி செயல்பட முடியும்? மக்களிடம் அனுமதி பெற்றிருக்கிறீர்களா? எனவே நீங்கள் எதிலும் அக்கறை காட்டவில்லை.

இப்போது காப்பீட்டுத் துறையில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்படுகிறது. காப்பீட்டுத் துறையிலிருந்து அரசாங்கம் அதன் அனைத்துப் பொறுப்பையும் கைவிட்டுவிட்டது. இது மக்களுக்கும் நாட்டிற்கும் செய்யும் அநீதி.

அதேபோல் தென்னிந்தியாவின் ஆறுகள் குறித்த பிரச்சனை தென்னிந்தியாவை வளமாக்க, தென்னிந்தியாவில் பாயும் ஆறுகளை இணைக்க வேண்டும். இது நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கோரிக்கை. தென்னிந்தியாவின் அனைத்து நதிகளையும் இணைக்கும்போது மட்டுமே, முழு தென்னிந்தியாவும் செழிக்கும். ஆறுகள் இணைக்கப்பட்டால் வறட்சி மற்றும் வெள்ளம் இருக்காது. இது நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்த மத்திய அரசின் சாதனை என்ன? ஒரு அமெரிக்க டாலர் அல்லது ஒரு ரஷ்ய ரூபிள் அல்லது பிற நாடுகளின் நாணயங்களுக்கு எதிராக ஒரு ரூபாயின் மதிப்பு என்ன? நமது ரூபாயின் மதிப்பு எவ்வளவு குறைந்துள்ளது? மதிப்பு குறைந்திருந்தால், இந்திய ரூபாயின் அந்த சரிவுக்கு யார் பொறுப்பு? அந்த சரிவுக்கு நீங்கள்தான் பொறுப்பு.

நான் கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

நமது தொழிலாளர்கள் மிகக் குறைந்த ஊதியத்தைப் பெறுகிறார்கள். ஒரு பக்கம் விலை உயர்வு, மறுபுறம் பணவீக்கம் அவர்களைப் பாதிக்கிறது. இந்த விலை உயர்வு... (தலைவரின் உத்தரவின்படி நீக்கப்பட்டது) நமது சமூகத்தின் ஏழை மற்றும் கடின உழைப்பாளி தொழிலாளர் வர்க்கத்தின் ஊதியத்தை ஒன்றுமில்லாததாக்குகிறது. இந்த அரசாங்கம் அவர்கள் கடினமாக சம்பாதித்த பணத்தை பறிக்கிறது.

இந்த நாட்டை ஆள இந்த அரசுக்கு எந்த தார்மீக உரிமையும் இல்லை. இந்த பட்ஜெட் மக்கள் விரோத பட்ஜெட்; நிறுவனங்களுக்கு உகந்த பட்ஜெட் மற்றும் அந்நிய நேரடி முதலீட்டுக்கு உகந்த பட்ஜெட். எனவே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் இந்த பட்ஜெட்டை எதிர்க்கிறேன்.

**(ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது)**

---

10,000 ரூபாய்க்கு பிளாட்டினம் வாங்குனா 300 ரூபாய் GST

10,000 ரூபாய்க்கு Health Insurance Premium கட்டுனா அதுக்கு 1800 ரூபாய் GST





**அரிய வகை அரசுக்கு பிளாட்டினம் அத்தியாவசியப் பொருள், இன்சூரன்ஸ் ஆடம்பரப் பொருள்.**

---

# ஏழைகளுக்கான செலவைக் குறைப்பதா? மோசமான பொருளாதாரக் கொள்கை

## ப.சிதம்பரம் எம்.பி கண்டனம்



வருமானவரியைத் குறைத்ததற்குப் பதிலாக, நிதியமைச்சர் ஜிஎஸ்டியை குறைத்திருக்கலாம். பணக்காரர்கள், ஏழைகள் எல்லோரும் ஜிஎஸ்டி வரி கட்டுகிறார்கள்.

பெட்ரோல், டீசல் விலையைக் குறைத்திருக்கலாம். நேரடியாகவோ, மறைமுகமாகவோ அனைத்து மக்களுக்கும் பலன் கிடைத்திருக்கும்.

100 நாள் வேலைத்திட்டத்திற்கான ஊதியத்தை உயர்த்திய இருந்தால் நாட்டின் கிராமங்களில் உள்ள மிக ஏழைகளுக்கு பலன் கிடைத்திருக்கும்.

குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தின்படி குறைந்த பட்ச ஊதியத்தை உயர்த்தியிருந்தால், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் ஊதியம் கொஞ்சமாவது கூடியிருக்கும்.

ஆனால் ரூ. 60,000 த்திலிருந்து ரூ 1லட்சம் வரை ஊதியம் பெறுபவர்களுக்கு மட்டும் வருமான வரியை ரத்து செய்திருப்பது, டெல்லி தேர்தலை குறி வைத்து செய்துள்ள அறிவிப்பாகும்.

நிதிப் பற்றாக்குறையை குறைத்து இருப்பதாக நிதியமைச்சர் பெருமையாக கூறியுள்ளார். ஆனால் எவ்வாறு அதை குறைத்துள்ளார்? மூலதன செலவுகளை குறைத்து இருக்கிறார்.

நாம் அனைவரும் சம்பந்தப்பட்ட விஷயம் இது. கிட்டத்தட்ட 43 ஆயிரம் கோடி ரூபாயை குறைத்து இருக்கிறார். அவர் எந்தெந்த செலவுகளை குறைத்துள்ளார் என்பதை நாம் கவனமாக பார்க்க வேண்டும்.

| | |
|---|---|
| உடல் நலம் | – ரூ.1,255 கோடி |
| கல்வி | – ரூ.11,584 கோடி |
| சமூகநலம். | – ரூ.10,019 கோடி |
| விவசாயம். | – ரூ.10,992 கோடி |
| கிராமப்புற மேம்பாடு | – ரூ.75,133 கோடி |
| நகர்ப்புற மேம்பாடு | – ரூ.18,907 கோடி |

இது சரியான கொள்கையா? எனக்கு தெரியாது. ஆனால் உறுதியாக சொல்வேன் இது நல்ல பொருளாதாரம் அல்ல!

நாடாளுமன்றத்தில் பட்ஜெட் விவாதத்தில் ப.சிதம்பரம் எம்.பி. பேச்சு

---

## வினாடி - வினா

1 லெனின் கலந்துகொண்ட கம்யூனிஸ்ட் அகிலத்தின் கடைசி உலகப் பேராயம் எது?

2 அகிலத்தின் செயற்குழு உருவாக்கிய ஐக்கிய முன்னணி செயல்தந்திரத்தை நான்காவது பேராயம் ஏற்றுக்கொண்டதா?



3 ஏஐடியூசிக்கு அகிலத்தின் நான்காவது உலகப் பேராயம் எதற்காக (1922ல்) தந்தி அனுப்பியது?

4 கம்யூனிஸ்ட் அகிலம் அனுப்பிய தந்தியில் அறிவுறுத்தியிருந்தது என்ன?

5 அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி ஆய்வு செய்வதற்காக நான்காவது பேராயம் எதற்காக குழு (American Commission) அமைத்தது?

6 சோசலிஸ்ட் கட்சிகளின் பெயரை எப்படி மாற்றுமாறு கம்யூனிஸ்ட் அகிலம் அறிவுறுத்தியது?

விடைகள் 12 ஆம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 87 இதழ் 46

# டெல்லி: இன்னொரு பாடம்!

26 ஆண்டுகளுக்குப் பின்னால் டெல்லி சட்டப்பேரவையை பிஜேபி பிடித்திருக்கிறது.

38.5% லிருந்து அதன் வாக்கு 45.57% ஆக உயர்ந்திருக்கிறது. காங்கிரஸ் வாக்குகளும் கூட 4.26 சதத்திலிருந்து 6.34% எனச் சற்று கூடியிருக்கிறது. ஆனால், ஆம் ஆத்மி கட்சியின் வாக்கு 53.57 சதத்திலிருந்து 43.57 சதமாகக் குறைந்துள்ளது.

70 தொகுதிகள் கொண்ட சட்டப்பேரவையில், ஆம் ஆத்மிக்கும் பிஜேபிக்கும் இடையே 2%தான் வாக்கு வித்தியாசம். ஆனால், பிஜேபி பெற்றது 48 இடங்கள், ஆம் ஆத்மிக்கு 22 இடங்கள். 14 தொகுதிகளில் காங்கிரஸ் வாக்கையும் ஆம் ஆத்மி வாக்கையும் கூட்டினால் பிஜேபியை விட அதிக வாக்குகள் வந்துள்ளன.

மகாபாரதக் கதையில் கர்ணனைக் கொல்ல, போர் துவங்கும் முன்பாகவே திட்டமிட்ட சதிகள் மூலம் அவனைப் பலவீனப்படுத்தியதைப் போல, ஆம் ஆத்மி கட்சியைத் தனது ஆள் பலம், பண பலம், அதிகார பலத்தைக் கொண்டு பிஜேபி சிதைத்துக் கொண்டே வந்தது.

ஆம் ஆத்மி அரசின் முழுச் செயல்பாட்டையும் முடக்க பாஜக முடிந்த அனைத்தையும் செய்தது. துணைநிலை ஆளுநரைப் பயன்படுத்தி, அரசின் திட்டங்கள் ஆணைகள் அனைத்தையும் தடுத்து நிறுத்தியது. முதல்வர் கெஜ்ரிவால், துணை முதல்வர் மணீஷ் சிசோடியா உள்ளிட்ட தலைவர்களைப் பொய் வழக்குகளின் கீழ் சிறையில் அடைத்தது. தேசியத் தலைநகர் பிரதேச டெல்லி அரசு, 2023 சட்டம் இயற்றி, டெல்லி ஆட்சியைத் தன் கையில் எடுத்துக் கொண்டது.

வேகன்ஆர் காரை ஓட்டிக்கொண்டு செல்லும் எளிமையான முதல்வர் என்று புகழப்பட்ட கெஜ்ரிவால், முதலமைச்சர் வீட்டை 34 கோடி ரூபாய் செலவழித்துப் புதுப்பித்தார் என்று, லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஆடைகளை தினமும் புதிதாய் அணியும் மோடி மையமான பிரச்சாரமாக எடுத்துச் சென்றார்.

வாக்காளர் பட்டியலில் இருந்து ஏராளமானவர்கள் விடுவிக்கப்பட்டுப் புதிதாகப் பலர் சேர்க்கப்பட்டனர். கெஜ்ரிவாலின் தொகுதியில் சென்ற தேர்தலில் 1,46,122 ஆக இருந்த வாக்காளர் எண்ணிக்கை இப்போது 1,06,365 ஆக குறைந்துவிட்டது. புதிதாகச் சேர்க்கப்பட்ட 2,209 பேரும் இதில் அடக்கம். கேஜ்ரிவால் 4,000 வாக்கு வித்தியாசத்தில் தோற்றுப் போனார்.

மற்ற மாநிலத் தேர்தல்களில் பேசுவது போல் அல்லாது, இங்கு பிஜேபி தனது குரலை மாற்றிக் கொண்டது. **"கோலி மாரோ சாலோ கோ' (அந்த நீசர்களை சுட்டுக்கொல்லுங்கள்)** என்ற வன்முறை முழக்கத்தைக் கைவிட்டு, **ஏக் ஹே டு சேஃப் ஹே (ஒன்றாக இருந்தால் பாதுகாப்பு)** என்று முழங்கியது. தன்னோடு இருந்தால் பாதுகாப்பு என இஸ்லாமியர்களைக் குறிவைத்து பரப்புரை செய்தது.

கெஜ்ரிவால் ஆட்சியில் இலவச மின்சாரம், தண்ணீர், பெண்களுக்கு இலவசப் பேருந்து பயணம், தரமான அரசு பள்ளிக் கல்வி உள்ளிட்டவை தரப்பட்டன. அப்போதெல்லாம் இதனை 'ரெவ்டி கல்ச்சர்' (ஓசி கலாச்சாரம்) என்று கிண்டல் செய்த பிஜேபி, இப்போது அவை எதனையும் ரத்து செய்ய மாட்டோம் என்று உறுதியளித்தது.

அதோடு மட்டுமின்றிப் பெண்களுக்கு மாதம் 2,500, சமையல் எரிவாயு ரூபாய் 500, தீபாவளி ஹோலி இலவசங்கள் எனத் தானும் புதிய 'ரெவ்டி கல்ச்சரி'ல் புகுந்தது. ஆட்டோ ஓட்டுபவர்கள் வீட்டுப் பணியாளர்கள் ஜிக் ஒர்க்கர்ஸ் ஆகியோரிடம் கெஜ்ரிவாலுக்குச் செல்வாக்கு இருப்பதைக் குறைக்க, அவர்களுக்கு 10 லட்ச ரூபாய் ஆயுள் காப்பீடு என அறிவித்தது.

ஊழல் எதிர்ப்பு மனிதராக கெஜ்ரிவால் மீது நடுத்தர வர்க்கத்திற்கு ஒரு மயக்கம். டெல்லியில் 67% மக்கள் நடுத்தரவர்க்கத்தினர். பட்ஜெட்டின் போது ஆண்டுக்கு 12 லட்சம் வரை வருமான வரி இல்லை என்று அறிவித்து அவர்களது வாக்குகளை வளைத்துப் போட்டது.

தேர்தலின் போது பிஜேபி முன்வைத்த காற்று மாசு, யமுனை மாசு, சிதிலமடைந்து வரும் உள்கட்டமைப்பு, நகரின் தூய்மை போன்ற பிரச்சனைகளை பிஜேபி தீர்வு செய்யுமா? அல்லது வேறு மாநிலங்களில் செய்வதைப் போல, மதவெறியைத் தூண்டி எரிய விட்டு மக்கள் கவனத்தை மடை மாற்றுமா? டெல்லி மக்களுக்குக் காலம் பதில் சொல்லும்.

இந்தியா கூட்டணியில் தொய்வு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. பாஜகவின் பாசிச ஆபத்தை, மேடைகளில் கைகோர்த்துக்கொண்டு பேசிப் பயனில்லை! தன்னலத்தை விட, நாட்டின் நலன் மிகப்பெரிது!

# யுஜிசி வரைவு அறிக்கையைக் கண்டித்து மாணவர் பெருமன்றம் ஆர்ப்பாட்டம்!


தருமபுரி

துணைவேந்தர் நியமனத்தில் மாநில அரசின் அதிகாரத்தைப் பறிக்கும் யுஜிசியின் வரைவு அறிக்கையைத் திரும்பப் பெற வலியுறுத்தியும், கல்விக்கான நிதியைக் குறைத்துத் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய அரசின் பட்ஜெட்டைக் கண்டித்தும் மற்றும் முதுகலை மருத்துவப் படிப்பில் மாநில ஒதுக்கீட்டை உறுதி செய்ய வலியுறுத்தியும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சார்பில் கோவை, சேலம், திருவாரூர், ஈரோடு, தென் சென்னை, திருச்சி மாநகர், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக தர்மபுரி அரசு கலைக் கல்லூரியின் அடிப்படைத் தேவைகளை உள்ளடக்கிய பத்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தின் விளைவாக பள்ளியின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற உடனடியாகக் குழு அமைக்கப்பட்டுப் பணிகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன. மேலும் கல்லூரி வேலை நேரத்தைக் குறைக்கும் கோரிக்கை அடுத்த சில மணி நேரங்களில் கல்லூரி முதல்வரால் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. இதேபோன்று வட சென்னையில் இயங்கி வரும் வியாசர்பாடி அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியின் அடிப்படைத் தேவைகளை உள்ளடக்கிய கோரிக்கைகளை முன்வைத்து கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர்.



சேலம்


ஈரோடு வடக்கு



வட சென்னை


கோவை



திருச்சி மாநகர்



திருவாரூர்



தென் சென்னை

# இந்தியாவின் அவமானம் மோடி ஆட்சி!



த.லெனின்

**ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே**
**வேந்தமை வில்லாத நாடு.**

‘‘நல்ல அரசன் அமையாத நாட்டில் எல்லாவித வளங்களும் இருந்தாலும் எந்தப் பயனும் இல்லாமல் போகும் என்கிறது திருக்குறள்.





கோழைகளே சர்வாதிகாரிகளை உருவாக்குகிறார்கள் என்றார் மார்க்சிம் கார்க்கி அந்த வகையில்தான் அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்கள் மனிதாபிமானம் அற்ற முறையில் அமெரிக்க அரசால் கை விளங்கிட்டு, கால் விளங்கிட்டு திருப்பி அனுப்பப்பட்டனர். அப்போதும் அது வழக்கமான நடவடிக்கை தான் என்று மோடியால் பாஜக அரசாங்கத்தால் ஜாலம் பேச முடிகிறது. அதுவும் வெளிநாடுகளில் குறிப்பாக பாகிஸ்தான், பங்களாதேசில் இந்துக்கள் தாக்கப்பட்டால் பொங்கி ஏழும் சங்கீகள் இதில் நவ துவாரங்களையும் அடைத்து அமைதி காத்தனர்.

## மோடியின் நண்பர் ட்ரம்ப்!

இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராக பதவியேற்றுள்ள டொனால்ட் டிரம்ப், அமெரிக்காவில் சட்ட விரோதமாக, ஆவணங்களின்றி குடியேறியவர்களை திருப்பி அனுப்புவதில் முனைப்பாக செயல்பட்டு வருகிறார்.

சட்ட விரோத குடியேறிகளைத் திருப்பி அனுப்புவது, டிரம்பின் தேர்தல் பிரசாரத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. அதிபரான முதல் நாளில் டிரம்ப் கையெழுத்திட்ட உத்தரவுகளில் குடியேற்றம் சம்பந்தப்பட்ட உத்தரவுகளும் அடங்கும்.

கடந்த பிப்ரவரி 4 ம் தேதி இரவு டெக்சாஸ் மாகாணத்திலிருந்து சி17 போர் விமானம் புறப்பட்டது. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அளித்தத் தகவலின்படி, இந்த விமானத்தில் 104 இந்தியர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸில் உள்ள குரு ராம் தாஸ்ஜி சர்வதேச விமான நிலையத்தில் இந்த விமானம் தரையிறங்கியது.

இந்திய குடிமக்கள் நாடு கடத்தப்படுவது இதுவே முதல் முறை. விமானத்தில் இருந்தவர்கள் கைவிலங்கிடப்பட்டு இருந்த காணொளி சமூக ஊடகங்களில் பெரும் பேசுபொருளானது, இந்தியாவில் சர்ச்சையையும் கிளப்பியது.

இப்படி முதல் கட்டமாக நாடு கடத்தப்பட்டவர்களில், ஹரியானா 35, குஜராத் 33, பஞ்சாப் 31, உத்தரப்பிரதேசம் 3, மகாராஷ்டிரா 2 என்ற எண்ணிக்கையில் அமைந்தது.

தேனாறும், பாலாறும் ஓடும் பாஜக ஆட்சி செய்யும் குஜராத்தில் வேலையின்மையால் வாட்டமுற்ற பலர் தங்களது உயிரை பணயம் வைத்து கடந்த சில ஆண்டுகளாக 50 லட்சம் முதல், 1 கோடி ரூபாய் வரை செலவழித்து அமெரிக்காவிற்கு ஆவணங்கள் இன்றி சென்ற நிலையில்தான் இன்று இப்படி மீண்டும் நாடு கடத்தப்பட்டு திரும்பி உள்ளனர். இனியும் பல விமானங்கள் இந்தியாவிற்கு வரலாம்.

## அமெரிக்க நடவடிக்கைக்கு பதிலடி தந்த யு.பி.ஏ அரசாங்கம்!

கடந்த 2013 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இந்திய தூதர் தேவயானி கோப்ரகடே ‘‘கைவிலங்கு செய்யப்பட்டு, ஆடைகளை அவிழ்த்து சோதனை செய்யப்பட்டபோது’’ ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (UPA) தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் இந்தியா அளித்த பதிலடி அப்போதைய வெளியுறவுச் செயலாளர் சுஜாதா சிங், அப்போதைய இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதர் நான்சி பவலுடன் கடுமையான தனது எதிர்ப்பைப் பதிவு செய்ததார்.

முன்னாள் மக்களவை சபாநாயகர் மீரா குமார், ராகுல் காந்தி மற்றும் சுஷில் குமார் ஷிண்டே போன்ற காங்கிரஸ் தலைவர்கள் அந்த நேரத்தில் இந்தியாவுக்கு வருகை தந்த அமெரிக்க காங்கிரஸ் குழுவை சந்திக்க மறுத்ததையும், அமெரிக்க தூதரகத்திற்கு வழங்கப்பட்ட பல சலுகைகளை இந்திய அரசு திரும்பப் பெற்றதையும் பெருமையோடு சொல்லலாம். ஆனால், இன்று இந்தியா ஏன் இப்படி பல்லிலுத்து நிற்கிறது?

## தொடரும் படலம்!

இதுவரை சுமார் 18,000 இந்தியர்களை அனுப்புவதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன. மேலும் 3,000 இந்தியர்கள் ஏற்கனவே முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். சுமார் 20,000 இந்தியர்கள் உடனடியாக நாடு கடத்தப்படும் அபாயத்தில் உள்ளனர். நீதிமன்ற விசாரணைகள் இல்லாமலேயே அவர்கள் நாடு கடத்தப்படலாம் என்று கூறப்படுகிறது.

எது எப்படி போனாலும் சட்டவிரோதமாக ஆவணங்கள் இன்றி அமெரிக்காவில் வாழ்ந்தாலும் அவர்கள் குற்றவாளிகளாக இருந்தாலும், இவர்களை நம் நாட்டோடு பரிமாறிக் கொள்ள தனித்த ஒப்பந்தங்கள் இருந்தும் ஐக்கிய நாடுகள் சபையால் மனித உரிமைகள் குறித்து தெளிவாக வரையறுக்கப்பட்டாலும், அவற்றை எல்லாம் அடாவடித்தனமாக மீறுவதுதான் அமெரிக்காவின் வாடிக்கை அந்த நாட்டிற்கு அடிமை ஊழியம் செய்வதற்கே தாங்கள் அவதரித்ததாக கூறிக்கொண்டு அரசியல் நடத்தும் பாசிச பாஜக இன்று வெளிரிப் போய் குட்டு வெளிப்பட்டு நிற்கிறது.

## கொலம்பியாவின் தன்மான உணர்ச்சி!

அதிபராக பதவியேற்றதும் சட்ட விரோதமாக குடியேறியவர்கள் எனக் கூறி, கொலம்பியா நாட்டைச் சேர்ந்த சிலரை ராணுவ விமானத்தில் டிரம்ப் அரசு திருப்பி அனுப்பியது. கைகள் கட்டப்பட்டு ராணுவ விமானத்தில் வந்தவர்களை கொலம்பியா அரசு ஏற்க மறுத்தது. சட்ட விரோதமாக குடியேறியவர்களை கண்ணியத்துடன் அனுப்ப வேண்டும், ராணுவ விமானத்தில் அனுப்பக் கூடாது எனக் கூறிய கொலம்பியா அதிபர், அமெரிக்க ராணுவ விமானம் தரையிறங்க அனுமதி மறுத்துவிட்டார். அதன் பின்பு தங்கள் நாட்டு பயணிகள் விமானத்தை அமெரிக்காவிற்கு அனுப்பி அவர்களை திரும்ப அழைத்து வந்தது கொலம்பிய இடதுசாரி அரசாங்கம். சின்னஞ்சிறு நாடான அந்த நாட்டின் அதிபருக்கு இருக்கும் நெஞ்சுரம் 56 இன்ச் பரப்பளவு உள்ள நெஞ்சுக்கு சொந்தக்காரரான மோடிக்கு இல்லாமல் போனது.

## அமெரிக்க அடிமை மனநிலையில் இந்தியா!

அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்டு இந்தியாவுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட இந்தியர்களைக் கைவிலங்கிட்டு அழைத்து வந்த விதம் மனிதத்தன்மையற்றது, இதை பாஜக அரசு தவிர்க்க நடவடிக்கை எடுக்காதது கண்டிக்கத்தக்கது என்று கூறி நாடாளுமன்றம் கூடியபோது எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன.

காங்கிரஸ், சமாஜ்வாதி, இந்தியக் கம்யூனிஸ்ட் உட்பட பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் இந்த விவகாரத்தில் மத்திய அரசு பதிலளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

ஆனால் அமளி தொடர்ந்ததால், மக்களவை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் மாநிலங்களவையில் இந்த விவகாரம் குறித்து வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் விளக்கமளித்தார்.

அப்போது இப்படி அனுப்பப்படுவது புதிதல்ல வழக்கமான முறை தான் என்று அமெரிக்காவிற்கு வக்காலத்து வாங்கியது. எந்த வகையில் நியாயம்?

சமீபத்திய ஆண்டுகளில் அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை எனக் கூறி, ஆண்டுவாரியாக ஜெய்சங்கர் ஒரு பட்டியலை வழங்கினார்.

அதன்படி, 2009ல் 734 பேர், 2010ல் 799 பேர், 2011ல் 599 பேர், 2012ல் 530 பேர், 2013ல் 515 பேர், 2014ல் 591 பேர், 2015ல் 708 பேர், 2016ல் 1303 பேர், 2017ல் 1024 பேர், 2018ல் 1180 பேர், 2019ல் 2042 பேர், 2020ல் 1,889 பேர், 2021ல் 805 பேர், 2022ல் 862 பேர், 2023ல் 617 பேர், 2024ல் 1,368 பேர், 2025ல் 104 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவால் மேற்கொள்ளப்படும் நாடு கடத்தலை அந்நாட்டின் குடியேற்றம் மற்றும் சுங்க அமலாக்கத்துறை செய்வதாக குறிப்பிட்ட ஜெய்சங்கர், அதற்கான நிலையான நடைமுறை 2012 முதல் அமலில் இருப்பதாக குறிப்பிட்டு அதனை நியாயப்படுத்தி உள்ளார்.

தனது குடிமக்களுக்கு அமெரிக்கா அநீதி இழைத்த போது பொங்கி எழுந்த சின்னஞ்சிறு நாடான கொலம்பியா எங்கே? கனடா எங்கே? இந்த இந்திய தே(வே)சபக்தர்கள் எங்கே?

## எவ்வளவு இந்தியர்கள் சட்டவிரோதமாக அமெரிக்காவில் உள்ளனர்?

அமெரிக்க அரசின் புள்ளிவிவரங்களின்படி, ஒரு கோடிக்கும் மேற்பட்டவர்கள் அமெரிக்காவில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ளனர். அதில், ஏழு லட்சத்துக்கும் அதிகமானோர் இந்தியர்கள் என்கின்றனர்.

எனினும், இந்தியர்களின் எண்ணிக்கை குறித்து மாறுபட்ட கருத்துகள் உள்ளன.

பியூ ஆய்வு மையத்தின் புதிய தரவுகள் 2022ல் 7,25,000 இந்தியர்கள் சட்ட விரோதமாக அமெரிக்காவில் இருப்பதாக கணக்கிடுகிறது. இந்த தரவுகள் அடிப்படையில் அமெரிக்காவில் உள்ள மொத்த சட்டவிரோத குடியேறிகள் வரிசையில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

ஆனால், இதற்கு மாறாக மைகிரேஷன் பாலிஸி இன்ஸ்டிட்யூட் இந்த எண்ணிக்கையை 3,75,000 என கணக்கிடுறது. இந்தத் தரவுகளின்படி, அமெரிக்காவில் உள்ள மொத்த சட்டவிரோத குடியேறிகள் வரிசையில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது.

எப்படி நமது உள்நாட்டு கிராமப்புற மக்கள் வயிற்றுப் பிழைப்புக்காக நகரங்களை நோக்கி படையெடுக்கிறார்களோ அப்படித்தான் இவ்வளவு பேர் வேலை தேடி வெளிநாடுகளுக்கு செல்கின்றனர்.

போலி முழக்கங்களை மட்டும் முன்வைத்து புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்காத மோடி அரசின் விளைவுதான் இந்த இடப்பெயர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கிறது. அதற்கான எந்த முயற்சியும் எடுக்காதவர்கள் எந்த குற்ற உணர்ச்சியும் இன்றி அமைதி காக்கத்தானே செய்வார்கள்! ஆனால், நாடு அமைதியாக இருக்காது!

தொடர்புக்கு : 9444481703

## கனடா அரசின் எதிர்வினை!

கனடாவை அமெரிக்காவின் 51வது மாகாணம் ஆக்கி கட்டுப்படுத்த அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விரும்புவது உண்மை என்றும், அதற்கான காரணம் இதுதான் என்றும் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியதாக கனடாவின் முக்கிய செய்தி ஊடகங்கள் செய்திகளை வெளி யிட்டுள்ளன.

இந்நிலையில்தான் அண்மையில் கனடா, சீனா மெக்சிகோவில் இருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்பட்டது. பின்பு கனடாவில் அமெரிக்க பிராண்டுகளை நிராகரித்து விடுவார்கள். அமெரிக்காவைத் தாண்டி உலகத்தில் 700 கோடி மக்கள் இருக்கிறார்கள் என்பதை கவனத்தில் கொண்டால் என்ன ஆகும் என்பதை சிந்திக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும் அமெரிக்காவிற்கான எரிவாயு பெட்ரோலிய பொருட்கள் அனைத்தும் கனடாவில் இருந்து தான் இறக்குமதி செய்யப்படுகிறது அவற்றின் மீதெல்லாம் அதிக வரி விதிக்கப்படும் என்று அறிவிக்கவும் செய்தார். இதனை தொடர்ந்து, பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு பிறகு கனடா, மெக்சிகோ மீதான வரிவிதிப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

# திரைப்படங்களில் கட்டமைக்கப்படும் வரலாற்றுப் பொய்கள்



ஆர்.ராமானுஜம்

**தமக்கொரு கேடு வந்தால் அதைப் பிறருக்கும் போய்ச் சேர வேண்டும் என நினைப்பது ஒருவகை மனக் கேடு, மூளை வியாதி, இஸ்லாமிய வெறுப்பு என்பதே கொள்கை, உயிர்மூச்சு; நாட்டில் நடக்கும் நல்லது கெட்டது அனைத்திற்கும் இஸ்லாமியரே காரணம்.**

என் பொருளாதாரம் எப்படிப் போனாலும் சரி பாகிஸ்தானுக்கு எதிராகப் பன்மடங்கு புதுப்புது ஆயுதங்களை வாங்கிக் குவிப்பேன்; இதையே புது தேசியக் குரலாக மாற்றி சாதாரண இந்தியர்களை நம்ப வைப்பேன் என்னும் கூத்து தொடர்கிறது. படித்தவர்கள், அறிவுஜீவிகள் மற்றும் இடதுசாரிகள் இந்தப் பித்தலாட்டப் பிரச்சாரத்தை மக்களிடம் அம்பலப்படுத்த வேண்டும்.

அரசுத்துறைகளில், மொழிகள் வளர்ப்புச் செயல்பாட்டில், அரசு நிறுவனங்களின் பெயர்களில், சட்ட வரைவுகளில் ஆர்.எஸ்.எஸ் வேலைத் திட்டத்தைக் (Agenda ) கவனமாக நிறைவேற்றி வருகிறது மோடி அமித்ஷா அரசு. அது பண்பாட்டுத் தளத்தில் தன் வேலைத் திட்டம் நிறைவேறப் புதிதாகக் கையில் எடுத்தது திரைப்படத்துறையை. இதுவே என் பார்வையில் திரைப்பட ஜிஹாத் (அ) ஃபிலிம் ஜிஹாத் எனத் தெளிவாய்ப் படுகிறது. நாம் குறிப்பாகக் கருத்தில் கொள்ள வேண்டியது, படத் தணிக்கைக்கான சட்டத் திருத்தம் 2022; அது திரைத்துறைக்கே காவிவண்ணத்தைப் பூசக் கொண்டுவரப்பட்டுள்ளது.

முதலாவதாக "சென்சார் போர்ட்" (censor board) நீக்கப்பட்டுள்ளது. பொது வெளியில் உள்ள பிரமுகர்கள் ஒரு குழுவாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்கள் தணிக்கை செய்த பின்னும் அந்தத் திரைப்படம் "நாட்டு நலனுக்கு உரியதா" என்பது பற்றி ஒன்றிய அரசின் பரிசீலனையின் பின்னர், "ஒன்றிய அரசின் உயர் அலுவலர்" ஒருவரின் தலை அசைவுக்குப் பின்னரே படம் வெளியிடப்படும் தகுதி பெறும். அது கிடைக்காவிடில் திரைப்படம் குறைப் பிரசவம்தான், படக் குழுவும், தயாரிப்பாளர்களும் ஒடிந்து போவார்கள்.

ஆனால் "மோடியால் நாடு மிளிர்கிறது, யோகியால் அமைதி பூக்கிறது" போன்று கூறும் படமோ, பாடலோ அமைந்தால் கை சொடுக்கும் நேரத்தில் பச்சைக் கொடிதான் பட்டொளி வீசும். படம் திரையரங்கு சேரும்.

இந்தப் பின்னணியில் பொது வெளிக்கு வந்த ஒன்றிரண்டு திரைப்படங்கள் குறித்து உங்களுடன் சில செய்திகள் பகிர்வதற்கு :

காஷ்மீரி ஃபைல்ஸ் – kaashmiri files
கேரளா ஸ்டோரி – kerala story
சபர்மதி ரிப்போர்ட் "sabarmati report.
எமர்ஜென்சி

2014 இல் மோடி நாட்டை ஆள வந்த பின்னரே இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்தது என்று அருள் வாக்குத் தந்தவர்

2–3 ஆண்டுகள் முன் பஞ்சாப், ஹரியானா மற்றும் பல பகுதி விவசாயிகள் சுமார் 2 ஆண்டுகளாய் வீதியில் இறங்கிப் போராடியதைக் கொச்சையாகப் பேசியவர்.

இவை போன்று எப்போதும் தத்துப் பித்தெனப் பேசி கேவலமாய் வாங்கிக் கட்டிக் கொள்ளும் நடிகை, மோடி பக்தி பூஜைத் துதியில் தங்க மெடல் வாங்கியும் உள்ள கங்கனா ரனாவத் இயக்கித் தயாரிப்பிலும் பங்கெடுத்து, நாயகியாகவும் நடித்த "எமர்ஜென்சி" திரைப்படம். எப்போதும் போல ஆர்.எஸ்.எஸ் செல்லம் அனுபம் கேருக்கும் இதில் முக்கியப் பங்கு உண்டு.

**காஷ்மீரி ஃபைல்ஸ்** : இந்தத் திரைப்படத்திற்குத், தனிப்பட்ட முறையிலும், நாட்டின் உயர் பொறுப்புப் பிரதமர் என்ற முறையிலும், மோடி அவர்கள் காட்டிய ஆதரவு, புகழ் பாடல், நெகிழ்ச்சிப் பேச்சு உலக மகா நடிகர்களை நடிப்பில் விஞ்சி நின்றது! விவேக் அக்னிஹோத்ரியின் உருவாக்கத்தில், ஆர்.எஸ். எஸ் ஆதரவுடைய அனுபம் கேர், பல்லவி ஜோஷி நடித்திருந்த இந்தப் படம் 2022 ஒன்றிய அரசின் முழு ஆதரவு உந்துதலோடு, நவம்பர் 2022 கோவா விலே நடைபெற்ற சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு அனுப்பப்பட்டது.

நம் நாட்டின் மீது உள்ள மதிப்பை நாசமாக்கி சர்வதேசத் தன்மைகொண்ட கறை கொண்டதாக மாற்றித் தந்தது மோடியின் பி.ஜே.பி அரசு. திரைப்பட விழாத் தலைமை நடுவர் (கடும் இஸ்லாம் வெறுப்பு நாடான) இஸ்ரேலைச் சேர்ந்த நாடவ் லாபிட் என்பவர். ஆனால் இஸ்லாமிய வெறுப்பு என்பது அவரிடம் துளியும் இல்லை.

சர்வதேச நடுவர்கள் பலர் இப் படத்தைப் பல காரணங்களால் ஒதுக்கினர். திரைத் துறையில் மிக அனுபவமும், மிகுந்த பெயரும் பெற்ற நாடவ் லாபிட் மற்றும் நடுவர் குழு இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மறுத்ததற்கு இரு முக்கிய காரணங்களைக் கூறினர். :

"இது ஒரு ஆவணப் படமா என்றால் அதனுள் இது வரவில்லை. வரலாற்று ரீதியில் ஆவணப்படுத்தாமல், ஒரு திரைக் கதைபோலச் சொல்லித் திரைப்படம் என்கின்றனர்.

சரி, திரைப்பட அடைப்புக் குறிக்குள் வைக்கலாம் எனில், ஒரு குறிப்பிட்ட மதம், பிரிவு சார்ந்தும், வெறுப்புத் தூண்டலுக்கும் அருவருப்பான வகையில் எடுக்கப்பட்ட படம் எப்படித் திரைப்படம் என்று ஏற்கப் படலாம்.

இந்தப் படம் எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டுமே என விட்டு விட முடிய வில்லை. காரணம், இந்த கருணை கொண்ட ஒன்றிய அரசு இதற்கு முழு வரி விலக்கு கொடுத்ததும், பல மாநில பிஜேபி அரசுகள் அதே போல் வரி விலக்குக் கொடுத்ததாலும் சாமானிய இந்தியனின் குரலாக நாம் இதைப் பற்றிக் கேள்வி கேட்கிறோம்.

சர்வ தேசத் திரைப்படக் குழுவினரை விட்டு விடுங்கள். ஓரளவு தகவல் தெரிந்த இந்தியன் கேட்கிறான் :

காஷ்மீரி ஃபைல்ஸ் படத்தில் இஸ்லாமியத் தீவிரவாதிகள், காஷ்மீர் மக்களில் இந்துக்களையே குறிப்பாகப் பண்டிட்களையே குறி வைத்துக் கொன்றனர் எனக் காட்டுகின்றனர்.. சங் பரிவார் ஆதரவு ஜக்மோகன் (ஆர்.எஸ்.எஸ் விசுவாசி) காலத்து ஸ்ரீநகர் காவல் ஆணையர் அலுவலகக் குறிப்பு கூறுவது : தீவிரவாதிகளால் கொல்லப்பட்டவர்களில் 40% பேர் காஷ்மீர் முஸ்லிம்களே!

இரண்டாவதாக, படத்தில் சித்தரிக்கப்படும் காலத்தில் ஃபாரூக் அப்துல்லா ஆட்சி நடக்க வில்லை. ஆர்.எஸ்.எஸ் விசுவாசி ஜக்மோகன் (ஆளுநர்), மற்றும் பி.ஜே.பி ஆதரவு பெற்ற வி.பி.சிங் தலைமையிலான ஒன்றிய அரசு.




இன்னும் இப்படத்தில் காட்டப்படும் பித்தலாட்டங்களைத் தோலுரித்துத் தெறிக்க விடலாம். (கூடுதல் தகவல்கள் : தி வீக் இதழ், மார்ச் 23, மணி ஷங்கர் ஐயர் கட்டுரை)

முன்னாள் ஏர் வைஸ் மார்ஷல் (அவரும் ஒரு காஷ்மிர் பண்டிட்) கபில் கக் கூறுகிறார் : 32 ஆண்டுகளாய் வலியுடனும் துன்பத்தோடும் வாழும் காஷ்மீர் முஸ்லீம்களின் உண்மை நிலையை மறைக்கிறது இப்படம். காஷ்மீர் முஸ்லிம் மக்கள் அனைவரையும் தீவிரவாதிகளாய்க் காட்டுகிறது. அவர்களை மனிதத் தனமற்றவராயும், பிலங்குகளாயும் காட்டுகிறது.

இப்படிப் பொய் பரப்பு வேலையை ஒரு மதம் சார்ந்தும், மற்றொரு மதத்தினரைப் பகைவர்களாக்ச் சித்தரிப்பதையும் ஒன்றிய அரசு அதன் தூக்குத் தூக்கி பிஜேபியும் செய்வதைத்தான் நாம் திரைப்பட ஜிஹாத் (அல்லது) ஃபிலிம் ஜிஹாத் என்கிறோம்.

திரைப் படம் மூலம் வெறுப்பு நட்டு விளைச்சல் காணும் இவர்கள் இதை ஒரு கருவியாகக் கொண்டு விட்டனர்.

கேரளா ஸ்டோரி இந்து முஸ்லிம் ஒற்றுமையும், இந்துக் கோவில்களில் பெருங்கூட்டமும், திருவிழாக்களும் ஒரு சேர அமைந்தது கேரள பூமி. இங்கே இந்து மதநிகழ்ச்சிக்கு எவ்வளவு கூடிக் கொண்டே போனாலும் அங்கெல்லாம் ஆர் எஸ்.எஸ் பி.ஜே.பி கும்பலைத் தள்ளி வைக்கும், நிராகரிக்கும் சமூகம் கேரளச் சமூகம். படிப்பறிவு, உழைப்பில் நம்பிக்கை கொண்ட கேரள மக்கள் பற்றி ஒரு நேர்மையற்ற திரைப்படத்தை வெளிவிட்டு ஆழம் பார்த்துள்ளது பி.ஜே.பி விஷமிக் கும்பல். பெரிய பாதிப்பு எதுவுமில்லை எனினும், எங்கோ சில இடங்களில் பலவீனமானவரிடத்தில் கூட இந்தப் பொய்கள் எடுபடக் கூடாது என்பதே நம் கருத்தும் கவலையும்.

இப்படம் குறித்து "தி ஹிந்து" பத்திரிகை இப்படிக் கூறியுள்ளது 5.5.23

காஷ்மீரி ஃபைல்ஸ் படத்திற்குத் துணையாக, பிளவு வாத தொனியோடு உணர்ச்சிகளைத் தவறாகக் கொண்டெடுத்துச் செல்வதாய் இருக்கிறது. படத்தில் காட்டப்பட்ட மத வெறியர்கள் போலவே, படத்தைத் தயாரித்தவர்களும், படம் பார்க்கும் மக்களை வெறுப்பாளர்களாக சமூகத்தில் நடக்க வைக்க முயன்றிருக்கிறார்கள்.

அதே பத்திரிகை 9.5.23 அன்று இப்படிப் பதிவிடுகிறது:

இது சிறிதளவும் கேரளாவைப் பற்றிய கதை அல்ல அதே நாட்களில் என்.டி.டிவி இப்படிக் குறிப்பிடுகிறது : "பயமுறுத்தும் நோக்கில் படமேடுத்து, நடிப்பும் சரியின்றி ஒரு பிரச்சாரப் படம் வந்திருக்கிறது.

சுதிப்டோ சென் (இயக்குனர்) மற்றும் அவர் சகாக்கள் வாட்ஸ் ஆப்பில் வரவேண்டிய ஒரு பதிவை நீளமாக்கிப் படமாக்கியுள்ளனர்.

படம் சொன்ன கூற்றுக்களில் உள்ள பித்தலாட்டங்கள் இமயம் தொடுபவை.

(எகா): சுமார் 32,000 பெண்கள் காணாமல் போயினர் என்பது இந்த பயாஸ்கோப் படத்தில் சொல்லப்படுவது. எல்லாத் தரப்பிலிருந்தும் நெருக்கி இந்தப் புள்ளி விபரம் பற்றித் தயாரிப்பாளரிடம் கேட்கப்பட, இதன் தயாரிப்பாளர்கள் "இல்லை இல்லை, வெறும் மூன்று பேர்தான் காணாமல் போயினர், அவர்கள்தான் தீவிரவாத ஐஎஸ்ஐஎஸ் க்குச் சென்றனர்" என வாக்குமூலம் தந்தனர். 3 எங்கே, 32,000 எங்கே? ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு விலை போய்ப் படமெடுத்தால் இப்படித்தான் நிகழும்.

தங்களின் பொய்ப் பிரச்சாரத்திற்கு நாட்டிலுள்ள அனைத்தையும் தவறாகப் பயன்படுத்தி வரும் ஆர்.எஸ்.எஸ் மோடி அமித் ஷா அரசு, (கல்வி, பண்பாட்டுத் துறை, நீதிமன்றங்கள், தேர்தல் ஆணையம், மத்தியப் புலனாய்வுக் குழு, அமலாக்கப் பிரிவு, ஊடகங்கள்) இப்போது திரைபடத்தையும் கபளிகரம் செய்து கொண்டு, கோயபல்ஸ் வேலையையைச் செய்து வருகிறது.

இது அவர்களின் ஃபிலிம் ஜிஹாத் மோசடிக் கொள்கை. இது குறித்து நாம் விழிப்புடன் இருப்போம்! விழிப்புணர்ச்சியைப் பெருந்திரள் மக்களிடம் கொண்டு செல்வோம்!

## சபர்மதி ரிப்போர்ட் :

2002 இல் கோத்ரா ரயில் நிலையத் தீக்கிரை சம்பவத்தின் பின்னணியில் எடுக்கப் பட்டுள்ளது. அதன் பின்னர் அரசின் முழு ஆசியோடு, சங் பரிவார் தீவிரவாதிகளின் வன்முறை வெறியாட்டம், கற்பழிப்பு, வீடுகள் தீக்கிரை, குழந்தைகள் உட்படக் கொலையாதல் நிகழ்ந்த பின்னணியில் அந்தக் காலகட்டத்தின் நிகழ்வுகளைப் பற்றி வாய் மூடி மௌனியாய் இப்படம் வந்துள்ளது. ஆர்.எஸ்.எஸ்.சின், பி.ஜே.பியின் பொய் பரப்பும் சுவரொட்டிதான் இது.

நேர்மை சிறுதுளி கூட இல்லாது ஒரு சம்பவத்தைப் பின்னணியாக்கிப் படம் எடுத்த ஆர் எஸ் எஸ் உதிரிகள், உண்மையின் முழுமையைச் சொல்ல விழையாது ஓடும் கொடியவர்கள். "பாதி உண்மை, முழுப் பொய்யை விட ஆபத்தானது "PARTIAL TRUTH IS DANGEROUS THAN THE BLATANT LIE. சரி, திரைப்படம் குறித்து நோக்குவோம்: கோத்ரா ரயில் நிலையத்தில், ஒரு ரயில் பெட்டி தீக்கிரையாகிறது. 56 மனித உயிர்கள் அக்கினிக்கு இரையாகின்றன. இது கொடிய செயல். அடுத்து, பதிலில்லை சபர்மதி ரிப்போர்ட் படம் எடுத்தவருக்கு. ரயில் பெட்டியில் தீக்கிரையான கருத்த சடலங்களை அதே ரயில் நிலைத் திலிருந்து அஹமதாபாத்திற்குப் பல நூறு மைல்கள் எடுத்துச் சென்று அங்கே காட்சிப் பொருளாக்கி வைத்த காட்சி தெரியாதா? அல்லது அந்தச் சதி கொடும் செயல் இந்தப் படத்திற்கு உறவில்லாததா? கோத்ரா ரயில் நிலையச் சம்பவமே பின்னர் குஜராத் முழுவதும் நிகழ்ந்த காட்டுமிராண்டி வன்முறைகளுகெனக் காத்திருந்தது போலாயிற்று.

இந்தச் சம்பவத்தையொட்டி ஓரிரு நாளில், உலக அமைதிக் காவலன், அமைதியின் பேருரு நரேந்திர மோடி (குஜராத் முதல்வராகச் சட்டப்படி பதவியில் இருந்தவர்) சொன்னார் :- It itself is not the action; it is reaction to an action (ஆதாரம் சசி தரூர் எழுதிய "paradoxical Prime Minister") இப்படி, வன்முறைகளுக்கு ஒரு நியாயம் கற்பித்தார் மோடி. action பற்றி சபர்மதி ரிப்போர்ட் படமெடுத்த ஆர்.எஸ்.எஸ் அறிவுப் பிஞ்சுகள் reaction பற்றியும் கட்சிப் படுத்தியிருக்க வேண்டுமல்லவா?

# அமைதியைக் குலைப்பவர்களை அரசியல் துணிவுடன் அடக்க வேண்டும்

**‘குன்றத்திலே குமரனுக்குக் கொண்டாட்டம்’ எனப் பட்டிதொட்டிகளில் எல்லாம் பாடல் ஒலித்த போது அடிவாரத்தில் முருகனும், நடுவில் மகாவீரரும், உச்சியில் மசூதியோடு இணைந்த தர்ஹாவும் இணைந்தே இருந்தன.**

இன்று திருப்பரங்குன்றம் மலையை வைத்துப் பொய்களின் உற்பத்தியாளர்கள் அரசியல் ஆதாயம் தேட நினைக்கிறார்கள்.

1868 ஆம் ஆண்டில் நெல்சன் தனது புகழ்பெற்ற மதுரை மேனுவல் நூலில் பக்கம் ஒன்பதில் 500 அடி உயர ஸ்கந்த மலையில் ஒரு முசல்மான் ஒருவரின் கல்லறையும் அதைச் சுற்றி நினைவு மசூதி அமைந்துள்ளதாகவும் அது பெயர் பெற்ற இடமெனவும் குறிப்பிடுகிறார்.

எஸ்.சி.ஹில் தனது யூசுப் கான் தி ரெபல் கமாண்டன்ட் என்ற 1914 ஆம் ஆண்டு நூலில் பக்கம் 56 இல் சிக்கந்தர் என்ற பெயருடைய பக்கிரி சிக்கந்தர் மலையில் வாழ்ந்து மடிந்ததாகவும் அவ்விடத்திற்கு இந்துக்களும் இஸ்லாமியர்களும் செல்வார்கள் எனவும் குறிப்பிடுகிறார். அவ்விடத்தில் யூசுப் கானால் மசூதி ஒன்று கட்டப்பட்டதென பாதர் ஸ்வார்ட்ஸ் குறிப்பிட்டதையும் ஹில் பதிவு செய்துள்ளார்.

1926 முதல் 1931 வரை மதுரை சார்பு நீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றத்திலும் பின்னர் பிரிவி கவுன்சில் என்ற மன்னர் மன்றத்திலும் நடந்த வழக்கின் தீர்ப்பை வெறுப்பு அரசியல் கூட்டத்தினர் ஆதாரமாகக் காட்டுகிறார்கள் 12.05.1931 ஆம் நாள் சர் ஜார்ஜ் லவ்ண்ட்ஸ் வழங்கிய அத்தீர்ப்பின் இறுதி பத்தியில் யாருடைய கைவசமும் இல்லாத பகுதி மட்டுமே கோவில் நிர்வாகத்தினருக்கு பாத்தியப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. அத்தீர்ப்பிலும் நெல்சனின் மதுரை மேனுவல் விவாதிக்கப்பட்டது.

ஆனால் அவ்வழக்கைப் பற்றி விவாதிப்பது தேவையற்றது. ஏனென்றால், 1991 ஆண்டில் ஒரு மிக முக்கியச் சட்டம் இந்தியாவில் நடைமுறைக்கு வந்தது. பிளேசஸ் ஆஃப் ஒர்ஷிப் ஸ்பெசல் புரொவிசன்ஸ் ஆக்ட் 1991 (Places of worship special provisions Act 1991) என்ற வழிபாட்டுத் தலங்களுக்கான சிறப்புச்சட்டம் அரசியலமைப்புச் சட்ட விரோதிகளால் பாபர் மசூதி இடிக்கப்படுமுன் அதற்கு முந்தைய வருடம் இயற்றப்பட்டது. அச்சட்டப்படி 15.08.1947 ஆம் நாளில் ஒரு வழிபாட்டுத்தலம் என்னவாக இருந்ததோ அதே நிலையில் அது இருக்க வேண்டும். அதை இன்னொரு வழிபாட்டுத் தலமாக மாற்ற முயற்சிப்பது மூன்று வருட தண்டனைக்குரிய குற்றமென எட்டு பிரிவுகளைக் கொண்ட அச்சட்டம் கூறுகிறது. இந்தியாவில் பாபர் மசூதிக்கு மட்டுமே அச்சட்டத்திலிருந்து விதி விலக்கு வழங்கப்பட்டிருந்தது.

கடந்த 12.12.2024 ஆம் நாள் இதே போன்று ஐந்து மசூதிகள் தொடர்பான வழக்குகளில் உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை ஒன்றை பிறப்பித்தது. உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி இந்தியா முழுமையிலும் ஒரு வழிபாட்டுத் தலத்தை மாற்ற எவ்வித வழக்குகளும் தாக்கல் செய்ய இயலாது அவ்வாறு ஏற்கனவே நிலுவையிலுள்ள வழக்குகளில் சொல்லப்பட்ட உத்தரவுகளும் செல்லாது.

சுருக்கமாகச் சொன்னால் சுதந்திரம் கிடைத்த நாளிலிருந்து எல்லா வழிபாட்டுத் தலங்களும் உள்ளது உள்ளபடி தொடர வேண்டும்.

மேற்சொன்ன சட்டப்பிரிவுகள்படி மூன்று வருடத் தண்டனைக்குரிய குற்றமான வழிபாட்டுத் தலங்களை மாற்ற முயற்சிப்பதேன்? அதற்கு முருக பக்தர்களை துணைக்கழைப்பதேன் என்ற கேள்வி நம்முன் எழாமல் இல்லை. அனைத்து சாதி அர்ச்சகர்கள் வேண்டாம் ஏனென்றால் எல்லோரும் இந்து அல்ல எனச் சொல்லும் அதே கூட்டம் இப்போது இந்துவே திரண்டு வா எனக்கூறுவது வேடிக்கைதான். இதே கூட்டம்தான் அனைத்து சாதி மக்களும் கோயிலுக்குள் நுழைந்ததும் மீனாட்சி அம்மன் கோயிலை பூட்டிக்கொண்டு வெளியேறியதையும் யாரும் மறக்கவில்லை.

நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றி எவ்வித செயல் திட்டங்களும் இல்லாதவர்களால், ராமேஸ்வரத்தில் சுடப்படும் மீனவர்கள், அருணாச்சல பிரதேச எல்லையை ஆக்கிரமிக்கும் சீனா, அதல பாதாளத்தில் பாயும் இந்திய ரூபாய் மதிப்பு, இது தவிர கொத்துக் கொத்தாக அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்படும் இந்தியர்கள் குறித்து கவலைப்படவில்லை. மாறாக மதத்தின் பெயரால் மக்களை பிளவு செய்வது அவர்களுக்கு அரசியல் ஆதாயமளிப்பதாகவே உள்ளது. வெறுப்பு அரசியல் பலனாளிகளுக்குத் இது நன்றாகவேத் தெரியும்.

ஏ.எஸ்.பி அய்யர் ஆங்கிலேயர் அல்லாத இந்திய ஐசிஎஸ் அதிகாரி மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதி, மேனாள் டிஜிபி லக்ஷ்மி நாராயணனின் மாமனாரும் தூதராகப் பணி புரிந்த ஏ.பி.வெங்கடேஸ்வரனின் தந்தையும் கூட, பல சமஸ்கிருத நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்கவும் செய்துள்ளார்.

அவர் எழுதிய 25 years a civilian நூலில் மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, நாகப்பட்டினம் நீலாயதாக்ஷி ஆகியன புத்தரின் தாயாருக்கான கோவில்கள் என்கிறார். இன்று பௌத்தர்கள் அக்கோயில்கள் குறித்து ஆய்வு செய்து மீட்டெடுக்க கேட்டால் என்னவாகும்?

தொல்லியல் ஆய்வாளர் வேதாச்சலம் அவர்களுடைய புகழ்பெற்ற எண்பெருங்குன்றம் நூலில் தென்பரங்குன்றம் உமையாண்டவர் கோவில் அர்த்த நாரீஸ்வரர் சிற்பமானது சமண தீர்த்தங்கரரது உருவத்தை அழித்து அர்த்த நாரீஸ்வரர் உருவாக்கப்பட்டிருந்தாலும் அக்குகைக் கோவிலில் தீர்த்தங்கரரது அடையாளமான சுருள் சுருளான அசோக மரத்தின் கிளைகளை அர்த்த நாரீஸ்வரரின் தலை மீது இன்றும் காண முடியும் என்கிறார்.

மதுரையில் மிக முக்கிய வரலாற்றுப் பேராசிரியர் வெங்கட்ராமன் தனது நண்பரான ஜெர்மன் அறிஞருடன் மதுரையின் அடையாளங்களில் ஒன்றான பாண்டி கோவிலுக்குள் 1970 களில் நுழைந்த போது பாண்டி முனியின் உச்சந்தலையில் உள்ள உஷ்னிஷா என்ற கொண்டை போன்ற அடையாளத்தைக் கண்டதும் (Oh My God he is Buddha ) கடவுளே! அவர் புத்தர்! எனக் கூறியதைப் பேராசிரியர் வெங்கட்ராமன் பல கூட்டங்களில் கூறியதை மதுரையினர் கேட்டதுண்டு. மறைந்த பேராசிரியர் பாண்டி முனியின் மீசை குறித்தும் கூறியுள்ளார். ஆனால், மதுரையில் பாண்டி முனியை புத்தராக்க யாரும் முயற்சிக்கவில்லை அவர் அருகிலேயே நூற்றுக்கணக்கான ஆடுகளும் கோழிகளும் பலி விருந்தாகின்றன!

எனவேதான் 1991 சட்டம் இன்று நமக்கு எப்போதையும் விட இப்போது தேவையாக உள்ளது.

திமுக அரசு திருப்பரங்குன்றம் பிரச்சினையை மிகுந்த எச்சரிக்கையாக கையாளுகின்றது. நீதிமன்றக் குறுக்கீட்டால் திருப்பரங்குன்றத்தில் மையம் கொண்ட போராட்டம் மதுரை பழங்காநத்தத்திற்கு மாறி அப்போராட்டத்தில் வன்முறை நடக்காமலிருந்தது.

அதனால் மதுரை மக்கள் நிம்மதி அடைந்ததென்னவோ உண்மை. ஆனால் மண்டைக்காடு கலவரத்தை அன்றைய அதிமுக எம்ஜிஆர் கையாண்டதைப் போல் பாம்பும் சாகக் கூடாது தடியும் உடைய கூடாது என அரசியல் உறுதியற்று இன்றைய அரசு கையாண்டால் சட்டம் ஒழுங்கு சிக்கல் பொது ஒழுங்கு பிரச்சினையாக மாற வாய்ப்புள்ளது.


அமைதியை குலைப்பவர்களை மயிலறகால் வருடுவதை அரசு கைவிட்டு அரசியல் பலத்துடன் கையாள வேண்டும். கொலை வழக்கில் சங்கராச்சாரியரை சிறைக்கனுப்பிய மாநிலம்தானே இது.!

**தி.லஜபதி ராய்**
**மூத்த வழக்கறிஞர்**



## திருப்பரங்குன்றம் பொதுமக்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்ட துண்டறிக்கை






1986ல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பரங்குன்றம் கிளை பொதுமக்களுக்கு வெளியிட்ட துண்டறிக்கை:

சிக்கந்தர் மலையுமல்ல!

ஸ்ரீ கந்தர் மலையுமல்ல! திருப்பரங்குன்றமே எங்கள் மலை! எங்கள் ஊர்!

அன்புள்ள பெரியோரே! தாய்மாரே!

பலநூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே திருவிழாக்களின் ஓசையில் கலகலப்பாக திகழும் திருப்பரங்குன்றத்தை ‘தன்பரங்குன்றில்’ களிகொள்சும்மை ஒலிகொள் ஆயம்“ என்று மதுரைக் காஞ்சி வியந்து பாராட்டுகிறது. பலநூறு ஆண்டுகளாக நிலைத்துவிட்ட அந்த இனிய ஒலிகளுக்கு இடையே இப்போது ஒரு சாக்குருவியின் ஓலம்!

மனிதர்களுக்குள் வேலிகட்டி பகைமை மூட்டி மோதவிட்டு கொட்டும் ரத்தத்தை நக்கிச் சுவை பார்க்கத் துடிக்கும் வெறிகொண்ட ஓலம் அது!

சங்க இலக்கிய காலத்திலிருந்தே, தீந்தமிழில் திருப்பரங்குன்றம் எனும் பெயர்கொண்ட நம் மலைக்கு, கந்தர் மலை என்று வடமொழிப் பெயர்சூட்டத் துடிக்கிறது ஒரு கூட்டம், அதை சிக்கந்தர் மலையாக திரிப்பதற்கு ஒரு கூட்டம், நாட்டையே ரணகளமாக்கி சீரழித்துக் கொண்டிருக்கும் நாசகரக் கும்பல் நம் ஊருக்குள் நுழைந்துள்ளது. தலைமுறை, தலைமுறையாய், சகோதரர்களாய் நின்றவர்களின் கையிலே கத்தியைக் கொடுத்து குத்திக்கொள்ளுமாறு உபதேசிக்கிறது.

முருகனை தரிசித்து மலையேறி காசிவிஸ்வநாதனுக்கு கரங்குவித்து உச்சிக்குப்போய் “தர்ஹாவில்” துவா செய்துவிட்டு மலைமுகட்டில் கடம்ப மர நிழலில் கால்நீட்டி காற்று வாங்கிய நம் முன்னோர்கள் முட்டாள்களாம்! எங்கிருந்தோ வந்தவர்கள் நமக்குச் சொல்கிறார்கள்.

அன்புள்ளம் கொண்டோரே !

மதங்கள் எல்லாம் மனிதனை வாழச் சொல்கின்றன! மதத்தின் பெயரால் அடித்துக்கொண்டு சாகச் சொல்பவர்களைப் புறக்கணிப்போம்! சுற்றுலா நகராக, புண்ணியஸ்தலமாக வளர்ந்துவரும் நமது ஊரை சுடுகாடாக்கும் முயற்சிகளை முறியடிப்போம்!

பயிர்விளைத்து, உயிர்தரிக்கும் நம்ஊரில் விஷம் விதைக்க நினைப்போரை வேரறுப்போம்!

வியாபாரமே உயிர்நாடியாய், ஆயிரம் குடும்பங்களுக்கு வாழ்வளிக்கும் நம் தெருக்களை போர்களமாக்க அனுமதியோம்! அனுமதியோம்!


சந்ததி சந்ததியாய் நமக்குள் வேரோடிய மதநல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் பாதுகாப்போம்| பாதுகாப்போம்!

அனைத்து மதங்களையும் சேர்ந்த அருமைமிகு பெரியோரே! நமக்குள் கயிறு திரிக்கும் புல்லுருவிகளுக்கு எதிராக கரம்சேர்ப்பீர்! ஒன்றிணைவீர்!

‘இருநிலத்தோரும் இயைக என ஈந்தநின் தன்பரங்குன்றம்” பரிபாடல்

**இவண்,**
**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி,**
**திருப்பரங்குன்றம் கிளை**

# செவ்வாய் கிரகத்தில் அமெரிக்க கொடி பறக்குமாம்?



அமெரிக்க அதிபர் டிரம்ப் பதவி ஏற்பு விழாவில், திடீரென செவ்வாய் கிரகத்தில் அமெரிக்கா கொடி நாட்டுவோம் என்கிறார்.

ஏனென்றால், செவ்வாய் கிரகம் செல்ல, செவ்வாய் கிரகத்தில் ஆய்வுகள் மேற்கொள்ள, சீனா 30 சதவீத முன் முயற்சிகளை எட்டிவிட்டது. சீனா விண்வெளி ஆய்வில் தற்போது மிக நவீனப்பட்டுள்ளது.

இதில் சீனா வெற்றி பெற்று விட்டால், உலக ஏகாதிபத்திய, பணக்கார அமெரிக்க நாடு தனது தோல்வியாக கருதும். உலகின் முதல் இடம் பறிபோகும் என்பதால்தான் "எலான் மஸ்க்" க்கு எப்படியாவது சீனா முந்தி விடக் கூடாது.

அதற்கு முன் அமெரிக்கா கொடி பறக்க வேண்டும் என கட்டளை. இதுதான் ஏகதிபத்திய புத்தி.

முன்னர் இப்படித்தான் சோவியத் ரஷ்யா, ஸ்புட்னிக் விண்வெளி கலம் அனுப்பியது.

அரிவால், சுத்தியல், நட்சத்திரம் பொறித்த பதாகையோடு ஸ்புட்னிக் உலகை வலம் வந்தது.

வியந்து போனது அமெரிக்கா. பின்னர் விண்வெளிக்கு யூரி ககாரின் சென்றார்.

மயங்கிவிட்டது அமெரிக்கா.

இந்த மயக்கம் அதிர்ச்சி மயக்கம்.

அதன் பின்னர் லைகா, சாம், குரங்கு, நாய்கள் என ஆய்வுகள்.

எப்படியாவது நிலவில் அமெரிக்கா கொடி பறக்கும் என்றது அமெரிக்கா.

அதே குரல் இப்போது.

தற்போது சீனாவின் கடற்படை மிக நவீனப்பட்டு, அது உலகின் முதல் இடத்தை பிடித்து விட்டது.

இதை அமெரிக்கா ஒப்புக்கொள்ள மறுக்கிறது.

எனினும் உலக நிபுணர்கள் இன்றுள்ள உலக கப்பற்படையில் சீனா முதலிடம் என்கிறார்கள்.

அமெரிக்கா அடக்கி வாசிக்கிறது.

காலம் மாறும், மாறியே தீரும்!

**- பிரியன்**

# தெலுங்கானா சாதி வாரி கணக்கெடுப்பு முடிவுகள்!

பீகார் மற்றும் காங்கிரஸ் ஆளும் கர்நாடக மாநிலத்திற்குப் பிறகு தெலுங்கானாவில் தற்போது சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

காங்கிரஸ் கட்சி அளித்த தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் தெலங்கானாவில் கடந்த ஆண்டு நவம்பர் 6ம் தேதி தொடங்கிய கணக்கெடுப்பு 50 நாட்கள் நடைபெற்றது.

தெலங்கானா மக்கள் தொகையில் மொத்தம் 56.33% பேர் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எனச் சாதிவாரி கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. அவர்களில் முஸ்லிம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 10.08% பேரும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 46.25% பேரும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்தபடியாக பட்டியல் சமூகத்தினர் 17.43% பேரும் பழங்குடியினர் 10.45% பேரும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சாதிவாதி கணக்கெடுப்பில் முற்பட்ட வகுப்பினர் (OC) 13.31% பேரும் முஸ்லிம்களில் முற்பட்ட வகுப்பினர் 2.48% பேரும் உள்ளதாக கூறப்படுகிறது. அம்மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையில் 50.51% ஆண்கள் மற்றும் 49.45% பெண்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மாநில அரசுகள் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவது சட்ட ரீதியாக நீதிமன்றங்களால் ஏற்கப்படாத நிலையில் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு இந்த கணக்கெடுப்பு நிச்சயம் உதவும் என்பதே உண்மை! மேலும் இட ஒதுக்கீட்டு கொள்கையில் ஏற்கனவே உச்ச நீதிமன்றம் அறிவுறுத்திய 50 விழுக்காட்டுக்கு மேல் போகக்கூடாது என்ற நிபந்தனையை மீறி தான் ஒன்றிய மோடி அரசு உயர் சாதி அறிய வகை ஏழைகளுக்கு 10 சத இட ஒதுக்கீட்டை அளித்துள்ளது. எனவே பிற்படுத்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கைக்கு உகந்த முறையில் 100% இட ஒதுக்கீடு அளிப்பதற்கு இது போன்ற அறிக்கைகள் கண் திறக்கும் சமூக நீதிக்கான அரசியல் போராட்டங்கள் தொடங்குவதற்கும் இது வழிவகுக்கும்!

**த/லெ**



மே.து.ரா.

# ஆளுநர் : கட்டமைக்கப்...

**இந்திய ஒன்றியத்தின் மாநிலங்களில் உள்ள ஆளுநர்களது இருப்பு, உரிமைகள், கடமைகள், பொறுப்புகள், பணிகள் ஆகியன குறித்துப் பலவாறான கற்பனைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.**

இவற்றைப் பொது மக்கள் மட்டுமன்றி, ஊடகத்தினர், அரசியலர், ஆட்சியாளர், வழக்கறிஞர், நீதியர் எனப் பெரும்பாலோர் ஏதோவொரு வகையில் நம்பிக்கொண்டிருக்கின்றனர் என்பதுதான் வியப்பாக இருக்கிறது.

1. ஆளுநர் என்பவர் ஒன்றிய அரசின் சார்பாளர்.
2. ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்குமான இணைப்பாக இயங்குபவர்.
3. மாநில அரசின் அன்றாட நடவடிக்கைகள் குறித்து ஒன்றிய அரசுக்கு அவ்வப்போது அறிக்கை அளிக்கின்ற கடமையாளர்.
4. பணியமர்த்தல், பதவி நீக்கல் ஆகியன குடியரசுத் தலைவரால் மேற்கொள்ளப்படுவதால், ஆளுநர் ஒன்றிய அரசுக்குக் கட்டுப்பட்டவர்
5. மாநில அரசை வழிநடத்தும் பொறுப்பும் கடமையும் ஆளுநருக்கு உள்ளது.
6. மாநில அமைச்சரவைக்கு அறிவுரை கூறுகின்ற பங்களிப்பு ஆளுநருக்கு உள்ளது.
7. மாநிலச் சட்டப்பேரவையில் நிறைவேற்றும் சட்டங்களுக்கு ஒப்புதல் தராமல் நிறுத்தி வைக்கும் தடுப்புரிமை ஆளுநருக்கு இருக்கிறது.
8. பேரவைத் தேர்தலில் தனியொரு கட்சி அல்லது கூட்டணிக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லையெனில் முதல்வரைத் தேர்வு செய்யும் தனியுரிமை ஆளுநருக்கு உண்டு.
9. மாநில அமைச்சரவையின் அறிவுரைகளை மட்டுமன்றி, குடியரசுத் தலைவர் அல்லது ஒன்றிய அமைச்சரவையின் அறிவுரைகளை ஆளுநர் ஏற்றுச் செயல்பட வேண்டும்.
10. தானாகத் தன் விருப்பில் முடிவெடுக்கும் பல உரிமைகள் ஆளுநருக்குத் தரப்பட்டுள்ள .
11. சட்டப்பேரவை நிறைவேற்றிய சட்டம் மட்டுமலலாது, ஆளுநரின் ஒப்புதல் பெறவேண்டிய கோப்புகள், பணியமர்த்தல் போன்றவற்றைத் திருப்பியனுப்பவும் திருத்தம் கேட்கவும் மறுக்கவும் ஆளுநருக்கு உரிமை உள்ளது.
12. அரசமைப்புச் சட்டம் தெளிவாகக் குறித்திருக்கும் ஒரு சில மாநிலங்களுக்கான, ஒரு சில தனி உரிமைகள் மட்டுமல்லாது, 356 ஆம் பிரிவைப் பயன்படுத்தி மாநில அரசைக் கலைக்க அறிவுரை கூறும் உரிமை தனிப்பட்ட முறையில் ஆளுநருக்கு இருக்கிறது.
13. மாநில அரசின் நிலைபாடுகளுக்கு மாறாகக் கருத்துத் தெரிவித்தல், மாநில அரசைப் பொதுவெளியில் கண்டித்தல் போன்றவற்றை ஆளுநர் மேற்கொள்ளலாம்.
14. சட்டப்பேரவையில் படிக்கவேண்டிய ஆளுநர் உரையைக்கூடத் திருத்தலாம் அல்லது புறக்கணிக்கலாம்.
15. பல்கலைக்கழகத் துணைவேந்தர் தேர்வில், மாநில அரசின் அறிவுரை இல்லாமல், ஆளுநர் தனித்துத் தானாகவே முடிவெடுக்கத் தக்க உரிமை பெற்றிருக்கிறார்.
16. இவையின்றி வேறு பல செயல்களையும், தனதுரிமை என்று நடைமுறையில் ஆளுநர் மேற்கொள்ள முடியும்.

இன்னும் இவை போன்ற பல உரிமைகளும் பொறுப்புகளும்கடமைகளும்பணிகளும் ஆளுநருக்கு உண்டு எனக் கூறப்பட்டு வருகிறது; நம்பப்பட்டும் வருகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள அனைத்துப் பிரிவுகளையும் முறையாகவும் ஆழமாகவும் படித்துப் பார்த்தால், இத்தகைய உரிமைகள், பொறுப்புகள், கடமைகள், பணிகள் என எதுவுமே ஆளுநருக்கு எவ்வகையிலும் வழங்கப்படவில்லை என்பது வெளிப்படையாகவே தெரியும்.

இத்தகைய நிலை எப்படி ஏற்பட்டது என்பதுதான் ஆழ்ந்த ஆய்வுக்குரியதாக இருக்கிறது.

1. சில உரிமைகளை ஆளுநர்கள் தம் விருப்பில் தாங்களாகவே எடுத்துக்கொண்டுவிட்டனர்.
2. ஒன்றிய அரசின் ஆட்சியாளர்கள் தங்களுடைய செயல்பாடுகளுக்கு ஏற்ற வகையில் சிலவற்றை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டனர்.
3. அரசமைப்புச் சட்டத்தின் வழிகாட்டுதல்களை முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் அல்லது மனதில் கொள்ளாமல், உயர் நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றமும் ஆளுநர்களுக்குச் சில உரிமைகளையும் பொறுப்புகளையும் கடமைகளையும் பணிகளையும் வாரி வழங்கிவிட்டன. இவற்றுடன், ஆளுநர்கள் தாமாக எடுத்துக்கொண்ட உரிமைகளுக்கு ஒப்புதல் தந்துவிட்டன.

நடைமுறையில் இவற்றையெல்லாம் தட்டிக் கேட்க முடியாமல் அல்லது செய்வதறியாமல் அல்லது இவற்றை இருப்பதாக நம்பிக்கொண்டு, வேறு வழியின்றி மாநில அரசுகள் கடந்த 73 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகின்றன.

அரசமைப்புச் சட்டம் உருவானபோது அரசமைப்பு அவையிலேயே மாநில ஆளுநரின் உரிமைகளும் கடமைகளும் பொறுப்புகளும் பணிகளும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பன குறித்த விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. பல்வேறு வகையான கருத்துக்கள் கூறப்பட்டு, செயல்பாடுகளும் நடைமுறைகளும் விரிவாக விளக்கப்பட்ட பின்னர்தான், ஆளுநர் பொறுப்புக் குறித்த இன்றைய இறுதிச் சட்ட பிரிவுகள் வடிவம் பெற்றன.

அரசமைப்பு அவையின் செயல்பாடுகள் குறித்த முழுமையான பதிவுகள் இவற்றையெல்லாம் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.


ஆனால், அரசமைப்புச் சட்டம் குறிப்பாகவும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் கூறாத உரிமைகள் பல ஆளுநருக்கு இருப்பதாக இன்று வரை எடுத்துக்கொள்ளப்பட்டு ஏற்கப்பட்டும் வருகிறது.

அரசமைப்பு அவையில் ஆளுநர் பற்றிய பிரிவுகளை வகுக்கும்போது 1949 மே 30 31 ஆகிய நாள்களில் நடந்த கருத்துப் பகிர்தல்கள், கீழ்க்கண்டவற்றை நடுவப்படுத்தி இருந்தன:

1. ஆளுநர் தேர்வு முறை: (அ) மக்கள் நேரடியாக வாக்களித்துத் தேர்வு செய்வது; அல்லது (ஆ) சட்டப்பேரவை தேர்ந்தெடுத்துத் தரும் நால்வரில் ஒருவரைக் குடியரசுத் தலைவர்

## ஆளுநருக்கான தகுதியினை...

அடுத்து, ஆளுநருக்கான தகுதியினை வரையறை செய்யும்போது, பல்வேறு கூற்றுகள் அரசமைப்பு அவை உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக, ஆளுநர் அவரது மாநிலத்தைச் சேர்ந்தவராக இருக்கக்கூடாது என்பதும் சிலரால் வலியுறுத்தப்பட்டது. ஆளுநர் அவரது மாநிலத்தைச் சேர்ந்தவராக இருக்கும்போது, மாநில அரசியல் நிலைபாடுகள், குழுப் போக்குகள் போன்றவை குறித்து முதல்வருடன்



பணியமர்த்துவது; அல்லது (இ) குடியரசுத் தலைவர் நேரடியாகப் பணியமர்த்துவது.

2. ஆளுநரின் உரிமைகள், பணிகள் மற்றும் செயல்பாடுகள்.
3. ஆளுநர் பொறுப்புக்கான தகுதி.

இவை குறித்து நீண்ட கால அளவில் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன என்றுதான் கூறவேண்டும்.

ஆளுநருக்கான அரசமைப்புப் பிரிவுகளை வகுக்கும் முன்னரே, 1947ஆம் ஆண்டில், ஆளுநர்கள் மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்து தொடக்கமாக அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால், மக்களாட்சி முறையில் சட்டப்பேரவை மற்றும் அமைச்சரவை ஆட்சி முறை என்ற நிலை உருவாக்கப்பட்டதால், ஆளுநர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவது பொருத்தமாக இருக்காது என்று கருதப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர் மற்றும் முதல்வர் தலைமையிலான அமைச்சரவை என்று இரண்டு வகை ஆளுமை நடுவங்கள் அமையும்போது, இவற்றுக்கிடையில் உரிமைப் பூசல் எதுவும் உருவாகிவிடக்கூடாது என்பதுதான் பெரிதும் பார்க்கப்பட்டது.

சட்டப்பேரவை, அமைச்சரவை, முதல்வர் என்ற வகையில் பரவலாக மக்களைச் சார்ந்திருக்கும் முறைக்கு மாறாக, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர் ஒருவர் தன்னை முன்னிறுத்தும் உரிமையும் கடமையும் செயல்பாடும் பணியும் தனித்த முறையில் இருக்கக்கூடாது என்பதும் இறுதி செய்யப்பட்டது.

பதவி ஏற்கும்போது, மாநில மக்களுக்காகப் பணியாற்றுவதாகவும் அவர்களது நலன்களுக்காகத் தன்னை ஈடுபடுத்திக்கொள்வதாகவும் உறுதி எடுத்துக்கொள்ளும் ஆளுநர், அந்த மக்களை முழுதும் அறியாமல் எப்படிப் பணியாற்ற முடியும் என்பதும் எடுத்துக்காட்டப்பட்டது.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டு அரசமைப்புச் சட்டத்தின் வரைவுக் குழுத் தலைவர் என்ற முறையில் அண்ணல் அம்பேத்கர் அவர்கள், ‘ஆளுநர்களுக்கு எத்தகைய செயல்பாடுகளும் தரப்படவில்லை, இன்னும் சொல்லப்போனால் செயல்பாடுகளே அவர்களுக்கு இல்லை’ (No function) என்று விளக்கம் தந்தார்.

அப்போதும்கூட, பல உறுப்பினர்கள், குடியரசுத் தலைவரால் பணியமர்த்தப்படும் ஆளுநர்கள், ஒன்றிய அரசின் முகவர்களாக மாறிவிடுவார்கள் என்ற அச்சத்தை வெளிப்படுத்தினர்.

இத்தகைய சூழலில் பிரதமர் நேரு, மாநிலத்தின் அரசியலில் ஈடுபாடு அல்லது ஆர்வம் இல்லாதவராக ஆளுநர் இருக்க வேண்டும் என்றும் மாநில அரசுக்கு ஆளுநர் முழு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்றும் கூறியது தெளிவினை ஏற்படுத்துவதாகத் தெரிந்தது. இதனால், வேறு மாநிலத்தைச் சார்ந்தவரை ஆளுநராக அமர்த்துவது இதற்கு வாய்ப்பாக அமையும் என்பது பொதுக் கருத்தாக அமைந்தது.

# ...படும் கற்பனைக் கடமைகள்

## ...ன வரையறை செய்யும்போது...

கருத்து வேறுபடுகின்ற நிலை ஏற்படலாம் என்பதுதான் இதிலும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டது.

அதே வேளையில், ஒரு மாநிலத்தின் மொழி, பண்பாடு, மக்களது வாழ்முறை போன்ற எதையும் அறியாத ஒருவர், வேறொரு மாநிலத்திற்கு ஆளுநராகப் பொறுப்பேற்றால், அவர் அந்த மாநிலத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் எத்தகைய பங்களிப்பை வழங்க முடியும் என்பது போன்ற வினாக்களும் எழுப்பப்பட்டன.

போக்கு வளர்ந்துவிடக்கூடாது என்ற அச்சத்தினைப் பலரும் எடுத்துக்காட்டினர்.

எனவே, மாநிலத்தின் மேலாண்மை, ஆட்சி என யாவும் சட்டப்பேரவைக்குக் கட்டுப்பட்ட அமைச்சரவையின் பொறுப்பில் விடப்படும்போது, ஆளுநர் எத்தகைய உரிமையும் பணிகளும் இல்லாத பெயரளவுக்கான அரசமைப்பு முறைத் தலைவராக மட்டுமே இருக்கவேண்டும் என்று முடிவு காணப்பட்டது.



அத்துடன், உரிமைகள், பணிகள், கடமைகள் அல்லது பொறுப்புகள் என எதுவும் இல்லாத, பெயரளவுக்கு அணிகலன் போல் இருக்கக்கூடிய ஆளுநரைத் தேர்தல்வழித் தேர்ந்தெடுப்பதில், காலத்தையும் பணத்தையும் உழைப்பையும் செலவழிக்க வேண்டியதில்லை என்பதும் நிலைநிறுத்தப்பட்டது.

சட்டப்பேரவைக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது கொள்கைகளையும் கோட்பாடுகளையும் செயல் திட்டங்களையும் முன் வைப்பார்கள். ஆனால், பெயரளவுக்கான ஆளுநர் பொறுப்புக்கான தேர்தலில் வேட்பாளரின் தனிப்பட்ட சிறப்புகள் மட்டுமே பேசப்படும் என்பதும் கணக்கில் கொள்ளப்பட்டது.

அடுத்து, சட்டப்பேரவை நான்கு பெயர்களைத் தேர்வு செய்து பரிந்துரைத்தால், அதிலிருந்து ஒருவரைக் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுப்பது என்ற கருத்து ஆய்வு செய்யப்பட்டது. மாநில சட்டப்பேரவையின் பரிந்துரையில், மூன்றாம் நான்காம் வரிசையில் இருப்போர் ஆளுநராக அமர்த்தப்பட்டால், மாநில அரசுக்கும் ஆளுநருக்கும் நல்லிணக்கம் இல்லாமல் போகலாம் என்ற அச்சம் தோன்றியதால் இக்கருத்தும் கைவிடப்பட்டது.

ஆளுநரருக்கும் முதல்வருக்கும் இடையில் எத்தகைய பூசலும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதே முழுமையாக மனதில் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அரசமைப்பு அவை உரைகள் வெளிப்படுத்துகின்றன.

இவற்றையடுத்துத்தான், மாநில ஆளுநரைக் குடியரசுத் தலைவர் நேரடியாகப் பணியமர்த்தலாம் என்னும் இப்போதைய நிலை ஏற்கப்பட்டது. இதோடு, ஆளுநருக்கு எத்தகைய அமையும் என்பது பொதுக் கருத்தாக அமைந்தது.

இருப்பினும், வலிமையான எதிர்ப்புகள் இருந்ததால், வேறு மாநிலத்தைச் சார்ந்தவர்தான் ஆளுநராகப் பணியமர்த்தப்படுவார் என்ற வரையறை அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், நேரு தன் கூற்றைத் தானே பின்பற்றவில்லை. அவரது ஆட்சிக் காலத்தில் அரசியல் செயல்பாட்டாளராக இருந்த காங்கிரசுக் கட்சியினர்தாம் மாநில ஆளுநர்களாக அமர்த்தப்பட்டனர். இவர்கள் ஆளுநர்களாகப் பொறுப்பேற்ற மாநிலங்களில் உள்ள அரசியல் போக்குகளில் தலையிடுவது ஏதோ ஒரு வகையில் நடந்தது.

1952 பொதுத் தேர்தலில், அன்றைய ஒன்றுபட்ட சென்னை மாநிலச் சட்டப்பேரவையில் காங்கிரசுக் கட்சி பெரும்பான்மை பெறவில்லை. அப்போது சென்னை ஆளுநராக இருந்த காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த பிரகாசா, பெரும்பான்மை பெற்ற இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையிலான கூட்டணியினை ஆட்சி அமைக்க அழைக்கவில்லை. மாறாக, சிறுபான்மையினராக இருந்த காங்கிரசின் சார்பில் ராசாசியை ஆட்சி அமைக்கச் செய்தார். இதற்குப் பிரதமர் நேருவும் உடன்பட்டிருந்தார் என்பதுதான் வியப்புக்குரியதாகும்.

அடுத்து, 1957 தேர்தலில் பெரும்பான்மை பெற்று கேரளாவில் ஆட்சியமைத்த இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நம்பூத்திரிபாட் அரசு 1959இல் கலைக்கப்பட்டது.

நேரு காலத்திலிருந்து, மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தவேண்டும் என்ற நோக்கமே ஒன்றிய அரசிடம் இருந்து வருகிறது. அன்று தொடங்கிய இத்தகைய போக்குகள் இன்று வரை தொடர்கின்றன.

அரசமைப்புச் சட்டத்தைப் பொறுத்தவரை, அதில் உள்ள சொல்லாடல்களும் விவரங்களும் மட்டுமே சட்டப்படி ஏற்கத் தக்கனவாகும். அரசமைப்பு அவையில் நடந்த கருத்துப் பகிர்தல்களும் வரைவுக் குழுத் தலைவர் என்ற முறையில் அம்பேத்கர் கொடுத்த விளக்கங்களும் சட்டத்தின் பகுதிகளாக அல்லது வழிகாட்டிகளாக இருக்க முடியாது என்பதெல்லாம் உண்மைதான்.

ஆனால், எழுத்துக்களும் உணர்வுகளும் (Letter and Spirit) என்பது ஏற்கப்பட்டதொரு சட்ட எதிர்பார்ப்பாகும்.

அரசமைப்பு அவையின் உணர்வுகள் பெரிதும் இப்போதைய அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுவிட்டன என்றுதான் கூறவேண்டும்.

ஆக, அரசமைப்பு அவையின் போக்கு மற்றும் இறுதி செய்யப்பட்ட அரசமைப்புச் சட்டப் பிரிவுகளின் நோக்கு ஆகியன ஒன்றை மட்டுமே வலியுறுத்தி உறுதி செய்கின்றன. அமைச்சரவையின் அறிவுறுத்தலுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டாக வேண்டிய ஆளுநருக்கு, வேறு எவ்வகையிலான செயல்பாட்டு உரிமைகளும் இல்லை என்பதுதான் அது.

எனவே, கட்டமைக்கப்பட்ட கற்பனைகளின் அடிப்படையில் மேற்கொண்டுவரும் எத்தகைய உரிமைகளும் கடமைகளும் பொறுப்புகளும் பணிகளும் ஆளுநருக்குத் தரப்படவில்லை என்பதே உண்மை நிலை.

மாநிலங்களில், குறிப்பாக எதிர்க் கட்சியினர் ஆட்சியிலிருக்கும் மாநிலங்களில் தற்போது ஆளுநராக இருப்போரது தனித்த செயல்பாடுகளும் தன்விருப்பப் போக்குகளும் அரசமைப்புச் சட்டத்துக்கு முற்றிலும் புறம்பானவை.

ஆளுநர் பதவி வேண்டியதில்லை என்பது கொள்கை நிலையாக இருக்கலாம். இருப்பினும், இன்றைய நிலையில் இருக்கின்ற நிலையில் நடைமுறைகளை வகுத்துச் செயல்பட்டாக வேண்டியதைப் புறக்கணித்துவிட முடியாது.

எனவே, இவற்றையெல்லாம் உச்ச நீதிமன்றம்தான் தலையிட்டுத் தெளிவுபடுத்த வேண்டும்.

தொடர்புக்கு : 9444075561

## ஆர்.எஸ்.எஸ்.சின் ஒப்பந்தக் கூலி சீமான்

### தோழர் கே.சுப்பராயன் எம்.பி.



தந்தை பெரியாரைக் குறிவைத்து, சீமானின் வெறிகொண்ட கழிசடைமொழி நடைத்தாக்குதலுக்குப் பின்னர், ஆர்.எஸ்.எஸ் இருந்து இயக்கிக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகிறது!

பெரியாரின் பிம்பம் தகர்க்கப்பட்டால்தான், தமிழ்நாட்டில் வர்ணாஸ்ரம அதர்மத்தைப் பரப்ப முடியும், பாஜகவை வளர்க்க முடியும் என்பதே ஆர்.எஸ்.எஸ்சின் அந்தரங்க நோக்கமாகும்!

அந்தத் திருட்டுத்தன தில்லுமுல்லுப் பணியை, தமிழ்நாட்டில் நிறைவேற்ற களமிறக்கப்பட்டுள்ள ஒப்பந்தக் கூலிதான் சீமான் என்று தமிழ்நாடு கோபக்கனல் பொங்கப் பார்க்கிறது!

தனது வாழ்நாளையும், தனது பரம்பரைச் சொத்து முழுவதையும் தமிழ்நாட்டு மக்களைப் பண்படுத்துவதற்காகவே அர்ப்பணித்து விட்டு மறைந்த அந்த மாமனிதர் தந்தை பெரியாரை, இந்த அர்ப்ப மானுடப்பதர் காயப்படுத்துவது கண்டு தமிழ் மக்கள் பொங்கி எழுகிறார்கள்!

இந்த அற்ப மானுடனை தமிழ்நாடு சந்திக்கும்; சமராடும்; முறியடிக்கும்!

தந்தை பெரியாரின் பெரும் புகழை,
தமிழ்ச்சங்கே, நீ முழங்கு!

## டிரம்ப் கையெழுத்து ஆபத்தான விளையாட்டு!

அமெரிக்க அதிபரின் கையெழுத்து உலகின் உரையாடலாக மாறிவிட்டது.

அமெரிக்கா சட்டப்படி அதிபருக்குத்தான் அதிக அதிகாரம். அளவில்லா அதிகாரம். அங்கு நாடாளுமன்றம், செனட், மாகாண சபை எல்லாம் அதிபரின் நடன அரங்குதான்.

அமெரிக்கத் தென்பகுதியில் அவசரநிலை.

உலகச் சுகாதார அமைப்பிலிருந்து வெளியேறுவது.

உலகச் சூழலியல், பருவநிலை மாற்றம் வெளியேறுவது, அமெரிக்கப் பிறப்புரிமை, குடியுரிமை போன்ற அதிர்ச்சியூட்டும் சட்டங்கள்.

அமெரிக்கத் தென்பகுதியில் ‘மெக்சிகோ’ அமைந்துள்ளது. ஏறத்தாழ நான்காயிரம் கிலோ மீட்டர் எல்லை நிலப்பரப்பு,

இங்கிருந்து மெக்சிகோ. ஏழை மக்கள்,

போதைப் பொருட்கள் நுழைகிறதாம்.

இது அமெரிக்கச் சட்டம் ஒழுங்குப் பிரச்சனையாக உள்ளதாம்.

எனவே, இனி எவரும் எல்லைப் பகுதிக்குள் நுழைய முடியாதாம். நிரந்தர ராணுவம் அங்கு இருக்குமாம். ஏற்கெனவே பல அதிபர்கள் மின் வேலி அமைத்தார்கள்.

தடுப்புச் சுவர் கட்டினார்கள். வேலி அமைத்தார்கள். எனினும் பிரச்சனை தீரவில்லை என்ன காரணம்?

அமெரிக்காவின் கலிபோர்னியா, டெக்ஸாஸ் உள்ளிட்ட பல மாகாணங்கள் மெக்சிகோவிற்குச் சொந்தமானது.

அமெரிக்கா உள்நாட்டு போரை தூண்டியது. 1945இல் மெக்சிகோவின் மிகப்பெரிய நிலப்பரப்புகளை அமெரிக்கா தன்னோடு இணைத்துக் கொண்டது.

இன்றும் கலிபோர்னியா உள்ளிட்ட நான்கு மாகாணங்களில், மெக்சிகோவின் பூர்வ குடிகள், மெக்சிகோவின் ஸ்பானிஷ் மொழி பேசும் பூர்வ குடிகள். தங்கள் பூர்வகுடிகளை நோக்கி, தங்கள் மூதாதையர்களை நோக்கி அவர்கள் செல்கின்றார்கள்.

அமெரிக்காவின் சமீபத்திய மிக மோசமான தீ விபத்து உலகறியும். இதனை அணைக்க மெக்சிகோ தீயணைப்புத் துறையினர் பல்லாயிரம் பேர் அமெரிக்கா சென்றனர். தீயை அணைத்தனர்.

மெக்சிகோ அமெரிக்கா நட்பு நாடு. உலகின் 14 வது பெரிய நாடு.

வர்த்தகத்தில் முன்னேறுகிறது. ஆனால் அமெரிக்கா கிழிக்கும் கோட்டை இது தாண்டாது.

அமெரிக்க ராணுவ பலம் அப்படி...?

சோவியத் இல்லாத வெற்றிடம் தெரிகிறது....?

– ஜனசக்தி கிரி

# இந்துத்துவ அரசியலாக்கப்பட்ட கும்பமேளா



வ.மணிமாறன்

**மக்கள் ஒன்று கூடும் உலகின் மிகப்பெரும் மத நிகழ்வான மகா கும்பமேளா, அரசியல் திருவிழாவாக மாற்றப்பட்டு விட்டது. இதனை இரட்டை எஞ்சின் அரசு திட்டமிட்டு செயல்படுத்தி இந்துத்துவ தேசிய அடையாளத்துடன் இணைக்கப்பட்ட சந்தைத் திருவிழாவாக மாற்றிவிட்டது.**





கும்பமேளா 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நான்கு நகரங்களில் கொண்டாடப்படும் திருவிழா ஆகும். பிரயாக்ராஜ் (முன்னர் அலகாபாத்), ஹரித்துவார், உஜ்ஜைனி, நாசிக் ஆகிய நான்கு நகரங்களின் ஆற்றுப் படுகைகளில் இந்த விழா கொண்டாடப்படுகிறது.

பிரயாக்ராஜ் நகரில் கங்கை, யமுனை ஆறுகள் சங்கமிக்கும் இடத்திலும், ஹரித்துவாரில் கங்கையிலும், நாசிக்கில் கோதாவரியிலும், உஜ்ஜைனியில் ஷிப்ரா ஆற்றுப் படுகையிலும் கும்பமேளா கொண்டாடும் போது மக்கள் திரளாக நீராடுகின்றனர்.

இப்படிக் கொண்டாடப்படும் 12வது கும்பமேளாவை மகா கும்பமேளா என்று அழைக்கின்றனர். இது 144 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரக்கூடியது. இந்த அடிப்படையில் தற்போது நடைபெறுவது மகா கும்பமேளா ஆகும். கடந்த ஜனவரி 13ஆம் தேதி தொடங்கி, பிப்ரவரி 26 ஆம் தேதி வரை 46 நாட்கள் நடைபெறும். இந்த நாட்களில் பிரயாக்ராஜ் நகரில் கங்கை, யமுனை சங்கமிக்கும் இடத்தில் மக்கள் திரண்டு நீராடுகின்றனர்.

### விஜபிகளுக்கு தடையற்ற வழிபாடு

மடாதிபதிகள், அகாராக்கள், உடல் முழுவதும் திருநீறு பூசிய நாக சாதுக்கள் தங்குவதற்கான கூடாரங்கள் தனியாக அமைக்கப்பட்டுள்ளன. அவர்கள் நதியில் நீராடிவிட்டு வழிபாடு செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. விஜபிக்கள் எனப்படும் பிரமுகர்கள் நேராக கங்கை, யமுனா சங்கமத்திற்குச் சென்று நீராடி வழிபட்டுச் சென்றனர். குடியரசுத்தலைவர் முர்மு, பிரதமர் மோடி, ஒன்றிய அமைச்சர் அமித்ஷா, அமைச்சர்கள், பல்வேறு மாநில முதலமைச்சர்கள், தொழிலதிபர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான பிரமுகர்கள் நதியில் நீராடி வழிபட்டுச் சென்றனர். உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தனியாகவும் முக்கிய பிரமுகர்களுடன் சென்றும் பல முறை நீராடினார்.

ஆனால், நாள்தோறும் திரண்டுவரும் மக்கள் தங்குவதற்கு நெரிசலான கூடாரங்கள், அவர்கள் நதியில் நீராடிய பிறகு திரும்பி வருவதற்கும் உடை மாற்றுவதற்கும் எளிதாகச் செல்லமுடியாமல் கூட்ட நெரிசல், ஈர உடைகளுடன் ரயில் நிலையங்களுக்கும் பேருந்து நிறுத்தங்களுக்கும் செல்ல முடியாமல் திணறும் நிலை. ஓரிடத்தைக் கடப்பதற்குக்கூட பல மணி நேரங்கள் காத்திருக்க வேண்டிய சூழல், சில நாட்களில் 300 கிலோ மீட்டர் தொலைவுக்கு போக்குவரத்து நெரிசலால் நின்று கொண்டிருந்த ஊர்திகள்.. இவைதான் பிரக்யாராஜ்நகரின் கும்பமேளா ஏற்பாடுகள்.



### நெரிசலில் 30 பேர் பலி

மவுனி அமாவாசை அன்று லட்சக்கணக்கான மக்கள் நீராடுவதற்காக குவிந்தனர். இதனால் நீராடுவதற்காக ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டும் தடுப்புகளை உடைத்துக்கொண்டும் ஓடினர். பலர் தடுமாறி கீழே விழுந்தனர். அவர்களை மிதித்துக்கொண்டு நீராட ஓடினர். அதிகாலை 2 மணிக்கு எங்கும் மரண ஓலம், உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவும், புனித நீராடவும் எங்கு செல்வது? எப்படிச் செல்வது? என்பது தெரியாமல் மக்கள் திண்டாடினர். அவர்களை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று தெரியாமல் காவல்துறை திணறியது. ஆயிரக்கணக்கானோர் தங்களுடன் வந்தவர்களை, உறவினர்களைத் தேடி அலைந்தனர்.

கூட்ட நெரிசல் குறித்தும் இதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை குறித்தும் உத்தரப்பிரதேச பாஜக அரசு பேச மறுத்தது. மூடி மறைக்க முயன்றது. பின்னர் 30 பேர் இறந்ததாக அம்மாநில காவல்துறை அறிவித்தது.

கூட்ட நெரிசலில் கை, கால்கள் உடைந்தும் எலும்பு முறிவு ஏற்பட்டும் ஏராளமானோர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களைப் பற்றி எந்தக் கணக்கும் இல்லை. உத்தரப்பிரதேச அரசும் காவல்துறையும் போதுமான ஏற்பாடுகளைச் செய்யவில்லை. அவர்களின் அலட்சியமே காரணம் என நீராடத் திரண்ட மக்கள் குற்றம்சாட்டினர்.

தற்காலிக குடில்களில் பயன்படுத்திய சிலிண்டர்கள் திடீரென வெடித்ததில், குடில்கள் தீப்பற்றி எரிந்தது. பெரும் புகை மூட்டமாகக் காணப்பட்டது. தீயணைப்பு ஊர்திகள் விரைந்து செயல்பட்டு தீயை கட்டுப்படுத்தியதாக அரசு தெரிவித்தது. இவற்றையும் மீறி மக்கள் திரளுவதும், நீராடி வழிபடுவதும் நடந்துகொண்டுதான் இருக்கிறது.

### அரசியலாக்கப்பட்ட ஆன்மீக நிகழ்வு

நாடு விடுதலை அடைந்த பிறகு பல்வேறு கட்சிகளின் ஆட்சியில் கும்பமேளா நடந்துள்ளது. எந்த முதலமைச்சரும் கும்பமேளாவை அரசியலாக்கவோ தங்களை பெரும் பிம்பமாக கட்டமைத்துக் கொள்ளவோ முயன்றதில்லை. மக்களும் எந்த ஆடம்பரமும் பிரமாண்டமும் இன்றி மாட்டு வண்டிகளிலும் பேருந்துகளிலும் கால்நடையாகவும் கும்பமேளா நடக்கும் இடத்துக்குச் சென்று நீராடினர். வழிபடுவதிலும் அமைதியைத் தேடுவதிலும் அவர்கள் மூழ்கியிருந்தனர். ஆனால், இந்த ஆண்டு நடைபெறும் மகா கும்பமேளா இதுவரை இல்லாத அளவுக்கு, ஆர்எஸ்எஸ், பாஜகவின் அரசியல் நோக்கங்களுக்கு ஏற்ப அரசியலாக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி, முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் படங்களுடன், அலகாபாத் என்னும் பெயரை மாற்றி பிரயாக்ராஜ் எனப் பெயரிடப்பட்ட நகரில் நடைபெறும் ‘புதிய இந்தியாவின்’ முதல் கும்பமேளா. ‘இந்தியாவின் காலத்தால் அழியாத ஆன்மீகப் பாரம்பரியத்தின் வெளிப்பாடு’ போன்ற வாசகங்கள் இடம்பெற்ற சுவரொட்டிகள் உத்தரப்பிரதேசத்தை நிறைத்தன. உத்தரப்பிரதேச அரசு நாடும் முழுவதும் விளம்பரங்கள் கொடுத்தது. கும்பமேளா என்ற ஆன்மீக நிகழ்வு, இந்துத்துவ தேசிய அடையாளத்துடன் இணைக்கப்பட்ட திருவிழாவாக மாற்றப்பட்டுள்ளது.

பல்வேறு நம்பிக்கைகள், மரபுகள் சங்கமிக்கும் பன்மைப் பண்புகளுடன் கூடிய கும்பமேளாவாக இல்லாமல், அரசியல் மயமாக்கப்பட்ட விழாவாக மடைமாற்றப்பட்டு விட்டது. பக்தி, வழிபாடு என்பதன் அடிப்படை உணர்வையே ஒன்றிய மோடி அரசும் உத்தரப்பிரதேச யோகி அரசும் இணைந்து சீர்குலைத்து விட்டது.

“திக்கற்றவருக்குத் தெய்வமே துணை” என்று வாழ்க்கையில் துன்பங்களுக்கு உள்ளாகி, திண்டாடும் மக்களுக்காக சொல்லப்படும் பழமொழி ஒன்று உண்டு. ஆனால் அந்தத் தெய்வமும் அதனைச் சுற்றிக் கட்டமைக்கப்பட்ட மதமும் திக்கற்று இருக்கிறது. மக்களே துணை நிற்க வாருங்கள் என்று சங்கிகளும் சங்கிகளின் அரசும் அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது. அதற்கு மகா கும்பமேளாவே சான்று.

தொடர்புக்கு: 9500001224

## பாவம் செய்தவர்களே செல்வார்கள்

“கும்பமேளாவுக்கு பாவம் செய்தவர்கள் மட்டுமே செல்வார்கள். பாவம் செய்தவர்கள் மட்டுமே செல்ல வேண்டும். ஆனால் எப்போது பாவம் செய்தேன் என்று யாராவது சொல்வார்களா? உத்தரபிரதேசத்தில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. இங்கு காட்டாட்சி நடைபெறுகிறது. முதலமைச்சர் சர்வாதிகார மனப்பான்மையுடன் செயல்படுகிறார். அவர் என்ன வேண்டுமானாலும் செய்கிறார். இங்கு எப்போது, யார் உயிரிழப்பார்கள் என்று யாருக்கும் தெரியாது”

**சந்திரசேகர் ஆசாத்** எம்.பி.,
உத்தரப்பிரதேசம்

## ரூ.2 லட்சம் கோடி வளர்ச்சி

உத்தரப்பிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் பேச்சு:

“இது மிகப்பெரிய ஆன்மிகத் திருவிழா. கும்பமேளாவுக்காக ரூ.5,000 கோடி செலவிடப்பட்டுள்ளது. கோடிக்கணக்கான மக்களின் வருகையால், செலவிடப்பட்டதை விட கூடுதல் வருவாய் அரசுக்கு கிடைக்கும். உத்தரப்பிரதேச மாநிலத்தின் பொருளாதாரத்தில் 2 லட்சம் கோடி ரூபாய் (2 டிரில்லியன்) வளர்ச்சி ஏற்படும்.

2017 ஆம் ஆண்டுக்கு முன்பு வாரணாசிக்கு 50 லட்சம் பேர் வருகை தந்துள்ளனர். இது 2024 ஆம் ஆண்டில் 16 கோடியாக அதிகரித்துள்ளது. அதேபோல, 2016ல் வெளிமாநிலங்களைச் சேர்ந்த 2.83 லட்சம் சுற்றுலாப் பயணிகளும், வெளிநாடுகளைச் சேர்ந்த 1,200 பயணிகளும் அயோத்திக்கு வருகை தந்துள்ளனர். ஆனால், 2024 ஆம் ஆண்டில் செப்டம்பர் வரையிலான ஒன்பது மாதத்தில் மட்டும் 13.55 கோடி பேர் அயோத்திக்கு வந்துள்ளனர்.



அரசுப் போக்குவரத்தை பயன்படுத்துதல், ஓட்டல்கள் உணவகங்கள் என அனைத்திற்கும் ஒரு நபருக்கு ரூ.5,000 என்று கணக்கிட்டால் கூட, வாரணாசியில் மட்டும் ரூ.80,000 கோடி வருவாய் கிடைத்துள்ளது. உத்தரப்பிரதேச மாநிலம் சுற்றுலா மற்றும் பொருளாதாரத்தில் பெரும் வளர்ச்சி அடையும்.”

## அனைத்துத் தொழிற்சங்கங்கள் சார்பில்

# ஒன்றிய நிதிநிலை அறிக்கை நகல் கிழித்தெறியும் போராட்டம்

தொழிலாளர் விரோத, மக்கள் விரோத ஒன்றிய நிதிநிலை அறிக்கை நகலைக் கிழித்தெறியும், நாடு தழுவிய போராட்டம், தொமுச, ஏஐடியுசி, சிஐடியு, தொமுச, ஐஎன்டியுசி, எச்எம்எஸ், ஏஐசிசிடியு உள்ளிட்ட அனைத்துத் தொழிற்சங்கங்கள் சார்பில், தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது.

**நெல்லை:** நெல்லை வண்ணார்பேட்டை ரவுண்டானாவில், தொமுச அமைப்புச் செயலாளர் ஏ.தர்மன் தலைமையில், ஏஐடியூசி மாநிலத் தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன் விளக்கவுரை ஆற்றினார். ஏஐடியூசி மாவட்டப் பொதுச்செயலாளர் ஆர்.சடையப்பன், மாவட்ட துணைத்தலைவர் ஆர்.ரெங்கன், அலுவலகச் செயலாளர் ஏ.முத்து கிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் எதிரில், தொமுச மாவட்டச் செயலாளர் கு.சேவியர், ஏஐடியுசி மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம், சிஐடியு மாநிலச் செயலாளர் சி.ஜெயபால், ஐஎன்டியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் என்.மோகன்ராஜ், ஏஐசிசிடியு மாவட்ட தலைவர் கே.ராஜன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

**செங்கல்பட்டு** தலைமை தபால் நிலையம் முன்பு, ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் எம்.ஜஹாங்கீர் முன்னிலையில், தொமுச மாவட்டச் செயலாளர் பெப்சி கண்ணன், சிஐடியு மாவட்டப் பொருளாளர் கலைச்செல்வி, ஏஐசிசிடியு மாநிலச் சிறப்பு தலைவர் சொ. இரணியப்பன், எச்.எம்.எஸ்.குமார் மற்றும் அனைத்துச் சங்கத் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

**திருச்சி:** திருச்சியில் தொலைத் தொடர்பு அலுவலகம் முன்பாக, தொமுச செயலாளர் ஜோசப் நெல்சன் தலைமையில் ஏஐடியுசி க.சுரேஷ், சிஐடியு ரங்கராஜன், ஏஐசிசிடியு ஞான தேசிகன் எச்எம்எஸ் ஜான்சன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

**விருதுநகர்:** விருதுநகர் பழைய பேருந்து நிலையம் முன்பு, தொமுச மாடசாமி தலைமையில், சிஐடியு தேவா துவக்கி வைத்தார். எஐடியுசி சமுத்திரம் நிறைவுரையாற்றினார். ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் முத்துமாரி, கட்டிடத் தொழிலாளர் சங்க நடராஜன், போக்குவரத்து பாண்டியன், பழனிக்குமார் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரத்தில் எல்பிஎப் தலைவர் கே.ஏ.இளங்கோவன் தலைமையில், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் ஆ.மூர்த்தி. தொமுச பேரவை துணைச் செயலாளர் பெ.சுந்தரவர்தன், ஏஐடியுசி எம்.ஜானகிராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**அரியலூர்:** அரியலூர் அண்ணாசிலை அருகில், ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் த.தண்டபாணி, தொமுச மாவட்டச் செயலாளர் ரெ.மகேந்திரன், சிஐடியு மாவட்டச் செயலாளர் பி.துரைசாமி, ஐஎன் டியுசி மாவட்ட தலைவர் டி.விஜயகுமார், எச்எம்எஸ் மாவட்டச் செயலாளர் எஸ்.இராமசாமி ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திருவண்ணாமலை:** திருவண்ணா மலையில் எல்பிஎப் க.சௌந்தரராஜன் தலைமையில், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் எம்.எஸ்.மாதேஸ்வரன் தொடங்கி வைத்தார். இதில் ஏஐடியுசி மாவட்ட தலைவர் வழக்கறிஞர் முத்தையன், மாவட்டச் செயலாளர் த.ராஜேந்திரன், இரா.தங்கராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**தருமபுரி:** தருமபுரியில் எல்பிஎப் மாவட்ட தலைவர் அன்புமணி தலைமையில், சிஐடியூ மாநிலச் செயலாளர் சி.நாகராசன் துவக்கி வைத்தார். ஏஐடியூசி மாவட்டச் செயலாளர்கள் கே.மணி, ஏஐசிசிடியூ பி.முருகன், எல்பிஎப் சண்முகராஜா, ஐஎன்டியூசி சண்முகம், எச்எம்எஸ் அர்ஜுனன் ஆகியோர் பேசினார்கள்.

**திண்டுக்கல்:** திண்டுக்கல்லில் எல்பிஎப் அழகர்சாமி தலைமையில், சிஐடியு கே.டி.கணேசன், ஐஎன்டியுசி உமா, ஏஐசிசிடியு ரவி, ஏஐடியுசி மாவட்ட தலைவர் பாலன், பெ.கிருஷ்ணசாமி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**நாமக்கல்:** நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல், திருச்செங்கோடு, குமாரபாளையம் ஆகிய மூன்று மையங்களில் போராட்டம் நடைபெற்றது. இதில் சிஐடியூ சு.சுரேஷ், எம்.செங்கோடன், எஸ்.அசோகன், ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் பி.தனசேகரன், சிபிஐ மாவட்டச் செயலாளர் க.அன்புமணி, மாவட்டத் தலைவர் எஸ்.ஜெயராமன், மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், எச்எம்எஸ் மாவட்ட தலைவர் ஏ.கலைவாணன், எல்பிஎப் மாவட்டச் செயலாளர் கபாடி எஸ்.பழனியப்பன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## நூறு நாள் தொழிலாளர்கள்

# இரண்டு மாத ஊதிய பாக்கியை வழங்கக் கோரி முற்றுகைப் போராட்டம்



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத் தொழிலாளர்களுக்கு, கடந்த இரண்டு மாத காலமாக ஊதியம் வழங்கப்படாததைக் கண்டித்தும், தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய சுமார் 1,500 கோடி ரூபாய் ஊதிய பாக்கியை உடனே வழங்க வேண்டும், வேலை நாட்களை அதிகரிக்கக் கோரும் முன்மொழிவை ஏற்க வேண்டும் என வலியுறுத்தி, சத்தியமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தைத் தொழிலாளர்கள் முற்றுகையிட்டனர். இதில் சங்கத்தின் தலைவர் பி.எல்.சுந்தரம் எக்ஸ் எம்எல்ஏ கண்டன உரையாற்றினார்.

# தமிழ்நாட்டின் கல்வி உரிமையை ஒன்றிய அரசு பறிப்பதை அனுமதியோம்!

**– டி.சுப்பிரமணியன்**

2024–2025 நடப்பு கல்வியாண்டிற்கான சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் பள்ளி மாணவர்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.2152 கோடி நிதியை ஒன்றிய பி.ஜே.பி அரசு பறித்துள்ள நடவடிக்கை படுமோசமான அரசியல் பழிவாங்கும் செயல்.

நடப்பு கல்வியாண்டில் ஜுன் 2024 தொடங்கி மே 2025 மாதம் முடிய உள்ளது. கடந்த மார்ச் மாதமே இந்தத் திட்டம் தமிழ்நாடு அரசால் ஏற்கப்பட்ட நிலையில் கல்வியாண்டு மே மாதம் முடிய உள்ள நிலையிலும் ஒன்றிய அரசு நிதியை வழங்கவில்லை என்பது நமக்குப் பெரிய ஏமாற்றமே.

நமக்கு வரவேண்டிய நிதியை ஒன்றிய பி.ஜே.பி அரசானது பி.ஜே.பி ஆளும் மாநிலங்களான உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் குஜராத் போன்ற பிற மாநிலங்களுக்குத் திருப்பிவிடப்பட்டுள்ளது என்பது பெரிய அதிர்ச்சியளிக்கிறது. இந்த அடாத செயலை தமிழ்நாடு கல்வி பாதுகாப்பு இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மாணவர்களுக்கான நிதியைப் பறிக்கும் இது போன்ற கீழ்தரமான செயலை இந்திய அரசியல் வரலாற்றில் வேறு எந்தப் பிரதமரும் செய்யத் துணிந்தது இல்லை.

எதிரிக் கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்கள் அரசியல் ரீதியாகப் பழிவாங்கப்படுகின்றன என்பது நமக்குத் தெரிந்த கதைதான், கட்சிகளைப் பிளவுபடுத்தி ஆட்சியைக் கவிழ்ப்பதும் நமக்குத் தெரிந்த கதைதான்.

மும்மொழிக் கொள்கையை ஏற்கவில்லை என்பதாலேயே தமிழ்நாட்டின் மீது தொடர்த் தாக்குதலை ஒன்றிய பி.ஜே.பி அரசு தொடுத்துள்ளது. குறிப்பாக மாணவர்களுக்கான கல்விநிதியைப் பறித்துள்ளது பி.ஜே.பி அரசின் ஆணவத்தின் உச்சம்.

பள்ளிக் கல்வியில் இந்தியாவில் இரண்டாம் இடத்திலும் உயர் கல்வியில் முதல் இடத்திலும் தமிழ்நாடு இருந்து வருகிறது.

தமிழ்நாட்டு மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை, உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் குஜராத் போன்ற மாநிலங்களுக்குத் திருப்பி விட்டதால் பி.ஜே.பி ஆளும் மாநிலங்கள் கல்வி நிலையில் தமிழ்நாட்டை எட்டிப்பிடித்து விட முடியாது என்பதை உணருங்கள். போலிப் பல்கலைக்கழங்களைத் தடுக்காமல் வளர்த்து விட்டு, போலிச் சான்றிதழ்களையும், போலிப் பட்டங்களையும் பெற்றுக் கொள்வதால் எந்த மாநிலமும் கல்வி நிலையில் உயர முடியாது.

‘கல்வி சிறந்த தமிழ்நாடு’ தாழ்த்தும் போகாது. கல்வி வழங்க முடியாது, கூடாது என்ற சவால்களைச் சந்தித்து முறியடித்து முன்னேறியது தமிழ்நாட்டின் வரலாறாகும்.

எத்தனை சதித்திட்டம் ஒன்றிய அரசால் ஏவப்பட்டாலும் தமிழ்நாட்டைப் பின்னுக்குத் தள்ளும் நோக்கம் திறைவேறாது. ஒன்றிய அரசு சூழ்ச்சிகள் மூலமாகவே ஆட்சி செய்து வருகிறது.

**“மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
**மன்னனின் கற்றோன் சிறப்புடையன்**
மன்னர்க்கு தன்தேசம் அல்லால் சிறப்பில்லை
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு
என்ற தமிழ் மூதுரை நம்மை வழிநடத்தும்.

பல போராட்டக் களங்களைச் சந்தித்து வென்றது தமிழ்நாட்டில் ஆசிரியர் இயக்கம். தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து ஆசிரியர் அமைப்புகளும், பொதுநல அமைப்புகளோடு இணைந்து தமிழ்நாட்டின் கல்வியைப் பாதுகாக்க மேம்படுத்திடப் போராட வேண்டிய நேரம் இது. ஆசிரியர்கள் மாணவர்கள் பொதுமக்கள் சேர்ந்து நின்று தமிழ்நாட்டின் கல்வி உரிமைக்காக உரக்கக் குரல் கொடுப்போம்.

“பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்” – குறள்



பங்கேற்ற, வாழ்த்திய அனைவருக்கும் நன்றி!

பண்ருட்டி, திருவதிகை, வாள்காரத்தெருவில் உள்ள
**எமது புதிய இல்லத் திறப்பு விழா**
09.02.2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது,
தலைமையேற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
மாநிலச் செயலாளர் தோழர் **இரா.முத்தரசன்**,

திறந்து வைத்த மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு தலைவர்
தோழர் **கே.சுப்பராயன்** எம்.பி,

பங்கேற்ற தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர்
தோழர் **டி.எம்.மூர்த்தி**,

வரவேற்ற மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர்
தோழர் **டி.மணிவாசகம்**
ஆகியோருக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கடலூர் மாவட்ட, ஒன்றிய, கிளை நிர்வாகிகளுக்கும், தோழர்களுக்கும், நண்பர்கள், உறவினர்களுக்கும் மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

**கே.ராமச்சந்திரன்** சிற்பி,
நகரக் குழு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
**நதியா ராமச்சந்திரன்**
**டி.சுரேஷ்** சிற்பி
**ராஜேஸ்வரி சுரேஷ்**

தங்கள் வரவால் மகிழ்ந்த
**பி.துரை**
கடலூர் மாவட்டச் செயலாளர்,
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
**இந்திரா துரை**, முன்னாள் எம்.சி.

## கோவில்பட்டி கோட்டாட்சியரைப் பணியிட மாற்றம் செய்யக்கோரி ஆர்ப்பாட்டம்



கோவில்பட்டி மருத்துவமனை அருகில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், தாலுகா செயலாளர் பு.பாபு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மந்தித்தோப்பு உள்ளிட்ட ஏழு பஞ்சாயத்துகளை கோவில்பட்டி நகராட்சியுடன் இணைக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யக்கோரியும், தொடர்ந்து மக்கள் விரோதப் போக்கினைக் கடைப்பிடித்து வரும் கோவில்பட்டி கோட்டாட்சியரை உடனடியாகப் பணியிட மாற்றம் செய்யவும் வலியுறுத்தப்பட்டது. கட்சியின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் பி.கரும்பன், தென்காசி மாவட்டச் செயலாளர் டி.இசக்கித்துரை, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பு.சேதுராமலிங்கம், மாவட்டக் குழு உறுப்பினர்கள் ரஞ்சனி கண்ணம்மா, இராமகிருஷ்ணன், விஜயலெட்சுமி, நகர துணைச்செயலாளர் அலாவுதீன் ஆகியோர் உரையாற்றினர்.

### போக்குவரத்துத் தொழிலாளர்களின்

## ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையை தொடங்க வலியுறுத்தி பிரச்சார இயக்கம்



போக்குவரத்துத் தொழிலாளர்களின் 15 வது ஊதிய ஒப்பந்தப் பேச்சு வார்த்தையை உடனடியாகப் பேசி முடிக்க வலியுறுத்தி சிஐடியு, ஏஐடியுசி தொழிற்சங்கங்கள் சார்பில், சிஐடியு தலைவர் டி.காரல் மார்க்ஸ், ஏஐடியுசி பொதுச் செயலாளர் எஸ்.தாமரைச்செல்வன் ஆகியோர் தலைமையில், மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டத்தை விளக்கி, தஞ்சாவூர் கரந்தை புறநகர் கிளை, தஞ்சாவூர் நகர் கிளை, பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் தொழிலாளர்களிடம் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

### இந்திய உணவுக் கழகம் தமிழக முழுவதும்

## நெல் கொள்முதல் செய்திட வலியுறுத்தி விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்




இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு முழுவதும் நெல் கொள்முதல் செய்திட வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், மணப்பாறை பேருந்து நிலையம் எதிரில், விவசாயிகள் சங்க ஒன்றியப் பொருளாளர் சொக்கை பழனிச்சாமி தலைமையில், ஆரோக்கியம், ரவி, ராமையா, மணி ஆகியோர் முன்னிலையில், விவசாயிகள் சங்கம் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் சிவசூரியன், போக்குவரத்துக் கழக ஏஐடியூசி மாநில துணைப் பொதுச் செயலாளர் சுப்பிரமணி, விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் பழனிச்சாமி, வையம்பட்டி ஒன்றியச் செயலாளர் தங்கராஜ், மருங்காபுரி ஒன்றிய துணைச் செயலாளர் கோவிந்தராஜ், கட்சி நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## ஜனசக்தி வளர்ச்சி நிதி

கோவை மாநகர் சிங்காரவேலர் மன்றம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 81 வது வார்டு கிளையின் முன்னாள் செயலாளர் கே.சேகர், ரமாதேவி ஆகியோர் மகள் செல்வி எஸ்.அஞ்சனா அவர்களின் பூப்பு நன்னீராட்டு விழா நடைபெற்றது.

இதில் கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, துணைச் செயலாளர் மௌ.குனசேகர், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பெ.மௌனசாமி, கே.ரவீந்திரன், கோவை மாமன்ற உறுப்பினர்கள் சாந்தி, பிரபா, மல்லிகா, மாவட்டக்குழு உறுப்பினர்கள் எம்.சந்திரன், வே.வசந்தகுமார், கே.புருஷோத்தமன், கே.ஆர்.தங்கராஜ், ஏஐஓய்எப் மாநில துணைச் செயலாளர் கலை.அஸ்வினி, வழக்கறிஞர் எஸ்.ராஜேந்திரன், கிளைச் செயலாளர் ஆர்.தேவேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர். அப்போது ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூபாய் 2000 அளிக்கப்பட்டது.

## கள்ளக்குறிச்சியில் அறிவை வளர்க்கும் புத்தகத் திருவிழா

கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், புத்தகத் திருவிழா வரும் 14 முதல் 23ம் தேதி வரை 10 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. இதில் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் சிந்தனைகளைத் தூண்டும் வகையிலான சிறப்பு வாய்ந்த புத்தகங்கள் இடம்பெறவுள்ளன. ஒவ்வொரு நாளும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், சிந்தனையாளர்களின் சொற்பொழிவுகளும் நடைபெற உள்ளன.

மேலும் பள்ளிக் கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் கலை நிகழ்ச்சிகள், கலைப் பண்பாட்டுத்துறை கலை நிகழ்ச்சிகள், உள்ளூர்ப் பேச்சாளர்களின் சிறப்புரைகள் மற்றும் புகழ்பெற்ற பேச்சாளர்களின் உரைகளும் தினந்தோறும் நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

## வேலை வழங்கக் கோரி மாற்றுத்திறனாளிகள் கவன ஈர்ப்பு போராட்டம்



கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக, மாற்றுத் திறனாளிகள் சங்கம் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், தமிழ்நாடு அரசு உரிமைகள் திட்டத்தில் 70 சதவிகிதப் பணியிடங்கள் மாவட்டம்தோறும் ஏழை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்க வேண்டும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாற்றுத்திறனாளிகள் 500 பேருக்குப் பணியிடங்கள் உருவாக்கி, பணிநியமனம் செய்ய வேண்டும். மாத உதவித்தொகை ரூ.5000 வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

## மயிலாடுதுறையில் டாஸ்மாக் கடையை மூடக்கோரி பூட்டு போடும் ஆர்ப்பாட்டம்



மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் கடைவீதியில், டாஸ்மாக் மதுபானக் கடையை இடம் மாற்றம் செய்திடக் கோரி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்த சாலை மறியல் போராட்டத்தையொட்டி, வட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற சமாதானக் கூட்டத்தில், 3 மாத காலக் கெடுவில் இடம் மாற்றம் செய்வதாக ஒப்புக்கொண்டு, நிறைவேற்றாத சீர்காழி வட்டாட்சியரைக் கண்டித்து, டாஸ்மாக் கடைக்குப் பூட்டு போடும் கண்டன ஆர்ப்பாட்டம், ஒன்றியச் செயலாளர் ஜெயசக்தி வேல் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் அ.சீனிவாசன் கண்டன உரையாற்றினார். விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் கே.எஸ்.சிவராமன், மாவட்ட தலைவர் பெ.வீரராஜ், சீர்காழி ஒன்றியச் செயலாளர் வே.நீதிசோழன் ஆகியோர் கலந்து கண்டன உரையாற்றினார்கள்.

### கள்ளக்குறிச்சி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில்

## அடிப்படை வசதிகளின்றித் தவிக்கும் விவசாயிகள்



கள்ளக்குறிச்சி ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் (மார்க்கெட்டிங் கமிட்டி) தென்னாற்காடு மாவட்டமாக இருந்த போது 197576 ம் ஆண்டில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்ட நிதி உதவியுடன் கட்டப்பட்டது. இதன் மொத்த பரப்பளவு 4ஏக்கர் 10 சென்ட் ஆகும். இதில் 2000 ம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குடோன் 2,750 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குடோன் 4, 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குடோன் 1, விவசாயிகள் ஓய்வு அறை 1, வியாபாரிகள் ஓய்வு அறை 1, பணப்பட்டுவாடா அறை 1, நெல் தரம் பிரிக்கும் அறை 1, எடை மேடை 1, உலர் களம் 1, என்று பரந்து விரிந்து இருந்தது. இன்று இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்ததால் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களைக் கொண்டு வந்து குடோனில் வைத்து விட்டு பொருட்களுக்கான விலை நிர்ணயம் தெரியும் வரை மரத்தடி நிழலில் சாலையில் படுத்து உறங்கி ஓய்வு எடுக்கும் நிலை உள்ளது. மேலும் விவசாயிகள் கூறுகையில் குடிநீர், கழிவறை வசதி, சாப்பிடும் வசதி என்று எதுவுமில்லை. இங்கு நெல், மணிலா, கம்பு, சோளம், கேழ்வரகு, எள், உளுந்து, மக்காச்சோளம் என்று விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் கொண்டு வந்து விற்பனை செய்வதன் மூலம் ஆண்டுக்கு சுமார் 80 கோடி ரூபாய் வரை வர்த்தகம் நடைபெறுகிறது. ஆனால் விவசாயிகளுக்கு அடிப்படை வசதிகள்கூடச் செய்து தராமல் விவசாயிகளை வஞ்சித்து வருகிறது அரசு என்று விவசாயிகள் புலம்புகின்றனர். இதற்கு அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## திண்டுக்கல் கே.கே.சாமிநாதன் 7ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்டச் செயற்குழு உறுப்பினர் கே.கே.சாமிநாதன் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்ச்சி, திண்டுக்கல் மாவட்ட அலுவலகத்தில் கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகன்டன், கே.கே.சாமிநாதன் குடும்பத்தாரும், முதுபெரும் தோழர் வெள்ளைச்சாமி, ஏஐடியூசி மாவட்ட துரை.சந்திரமோகன் மற்றும் மாவட்டச் செயற்குழு, மாவட்டக் குழு உறுப்பினர்களும் புகழஞ்சலி செலுத்தினார்கள்.

## வினாடி – வினா விடைகள்

1. நான்காவது உலகப் பேராயம்
2. ஆம், ஏற்றுக்கொண்டு விரிவுபடுத்தியது.
3. எட்டு மணி நேர வேலைக்கான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தது.
4. விடுதலைப் போராட்டத்தில் முக்கியப் பங்காற்றுமாறு
5. கம்யூனிஸ்ட் அமைப்புகளின் பிளவு குறித்து ஆய்வு செய்ய.
6. கம்யூனிஸ்ட் கட்சி

## ஸ்ரீராம் நிதி நிறுவனத்தின் முறைகேடுகளைக் கண்டித்து உண்ணாவிரதம்

இராமேஸ்வரம் ஸ்ரீராம் நிதி நிறுவனத்தின் முறைகேடுகளைக் கண்டித்து, ஆட்டோ சங்க மாநில துணைத்தலைவர் பி.ஜீவானந்தம் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் என்.கே. ராஜன் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்.

துணைத்தலைவர் ராஜா, சிபிஐ நகரச் செயலாளர் சி.ஆர்.செந்தில்வேல், ஆட்டோ சங்க மாவட்ட தலைவர் பி.சண்முகராஜன், செயலாளர் எம்.செந்தில், மாதர் சங்க மாவட்டச் செயலாளர் பி.வடகொரியா, மதிமுக, நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர். உண்ணாவிரதப் போராட்டத்தை மாநிலப் பொதுச் செயலாளர் பி.மாரியப்பன் முடித்து வைத்து உரையாற்றினார்.

### மகாத்மா காந்தி நினைவு தினத்தில்
## மதச்சார்பின்மையைப் பாதுகாக்க உறுதிமொழி ஏற்பு



அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் வடசென்னை மாவட்டத்தின் சார்பாக, மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்ட ஜனவரி 30 ஆம் தேதி, ஆர்.கே.நகர் 38வது வட்டத்தின் சார்பில், ஏஐஒய்எப் மாவட்டச் செயலாளர் ஏ.சுரேஷ் தலைமையில் மதச்சார்பின்மையைப் பாதுகாப்பு உறுதி ஏற்ப நிகழ்வு நடைபெற்றது.

அகில இந்திய தலைவர் சுக்ஜிந்தர் மகேசரி, பொதுச் செயலாளர் இரா.திருமலை கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

கட்சியின் வடசென்னை மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, மாவட்ட துணைச் செயலாளர் எம்.ஜெய்சங்கர், மாமன்ற உறுப்பினர் மோ.ரேணுகா, கட்சியின் பெரம்பூர் பகுதிச் செயலாளர் இரா.கோட்டி சுரேஷ், கொளத்தூர் பொறுப்பாளர் ஜி.ரவி, மாவட்டக் குழு உறுப்பினர்கள் ஜி.இராஜா, ஜி.ரவி, ஜி.எல். சீனிவாசலு, ஏஐஒய்எஃப் மாவட்டப் பொருளாளர் காவிரி செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்று மதச்சார்பின்மையைப் பாதுகாக்க உறுதியேற்றனர்.

## ஏஐடியுசி ஆட்டோ தொழிலாளர்கள் சங்கப் பெயர் பலகைத் திறப்பு விழா



கோவில்பட்டி மந்தித்தோப்பு ரோடு, அன்னை தெரசா நகர் பகுதியில், ஏஐடியுசி ஆட்டோ தொழிலாளர்கள் சங்கப் பெயர்ப் பலகைத் திறப்பு விழா ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் பாபு தலைமையில் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் கரும்பன் பெயர்ப் பலகை திறந்து வைத்தார். இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜேந்திரன், சிபிஐ மாவட்டக் குழு உறுப்பினர் சேதுராமலிங்கம், ஆட்டோ சங்கத் தலைவர் அருணாச்சலம், செயலாளர் சங்கர், பொருளாளர் அய்யனார், வட்டாரச் செயலாளர் அய்யப்பன், சட்ட ஆலோசகர் ரஞ்சனி கண்ணம்மா, இளைஞர் பெருமன்றம் செந்தில்ஆறுமுகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ஓடும் ரயிலிலிருந்து தள்ளிவிடப்பட்ட
## கர்ப்பிணிப் பெண்ணுக்கு 10 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும்

**சிபிஐ வேலூர் மாவட்டச் செயலாளர் கோரிக்கை**

ஓடும் ரயிலில் இருந்து தள்ளிவிடப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணுக்கு நிர்பயா சட்டத்தின் கீழ், ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று சிபிஐ வேலூர் மாவட்டச் செயலாளர் ஜி.லதா எக்ஸ் எம்எல்ஏ முதல்வருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

திருப்பூரில் பனியன் கம்பெனியில் வேலை செய்து வந்த பெண், திருப்பதி செல்லும் விரைவு ரயிலில் சித்தூர் பயணித்துள்ளார். ரயில் ஜோலார்பேட்டை வந்தபோது ஹேமராஜ் என்பவன் பெண்கள் பயணிக்கும் பெட்டியில் ஏறி, மேற்படி பெண்ணுக்குப் பாலியல் தொந்தரவு அளித்துள்ளான். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த அந்தப் பெண்ணை ஓடும் ரயிலில் இருந்து கீழே தள்ளி விட்டுள்ளான்.

தள்ளிவிடப்பட்ட பெண் கைகால் எலும்பு முறிவு ஏற்பட்டுத் தற்போது வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். குற்றவாளி காமக்கொடூரன் ஹேமராஜ் மீது குண்டர் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கவும், தமிழ்நாடு அரசின் புதிய பெண்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கடுமையான தண்டனை பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத் தமிழக முதல்வர் நிர்பயா சட்டத்தின் கீழ்10 லட்சம் நிவாரணத் தொகை வழங்க வேண்டும். ரயிலில் பெண்கள் பெட்டியில், பெண் போலீசாரைப் பாதுகாப்புப் பணியில் இருப்பதை ரயில்வே துறை உத்தரவாதப்படுத்த வேண்டும் என்று பாதிக்கப்பட்ட பெண்ணை மருத்துவமனையில் சந்தித்து ஆறுதல் கூறிய பின்பு, இதுகுறித்து அவர் முதல்வருக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார்.

### அகில இந்திய முற்போக்குப் பேரவை நடத்திய
## தொழில்நுட்பம், முன்னேற்றம், வேலைவாய்ப்பு குறித்து தேசியக் கருத்தரங்கம்




தொழில்நுட்பம், முன்னேற்றம் மற்றும் வேலைவாய்ப்புப் பிரச்சினைகள் தொடர்பான தேசியக் கருத்தரங்கம். அகில இந்திய முற்போக்குப் பேரவை சார்பில் பாட்னாவில் பிப்ரவரி 7 முதல் 9 ஆம் தேதி வரை நடைபெற்றது.

அகில இந்திய முற்போக்கு பேரவை மக்கள் மத்தியில் முற்போக்கான கருத்துகளைப் பரப்புவதற்காகவும், மூடநம்பிக்கைகளை அகற்றுவதற்காகவும், அறிவியல் ரீதியான மனப்பான்மையையும் உலகக் கண்ணோட்டத்தையும் மக்கள் மத்தியில் உருவாக்குவதற்காகவும், சுற்றுச் சூழல், புவி வெப்பமயமாதல், கல்வி, அறிவியல் தொழில்நுட்பம், பாலினச் சமத்துவம், மதநல்லிணக்கம், உலக சமாதானம், சாதியம் உள்ளிட்ட பல்வேறு சமூகப் பொருளாதாரப் பண்பாட்டுப் பிரச்சினைகள் குறித்து விவாதங்கள் நடத்துவதற்காகவும் உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.

இந்த அமைப்பின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் தேசிய அளவிலான கருத்தரங்கங்கள் முக்கியத் தலைப்புகளில் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டிற்கான கருத்தரங்கம் பிப்ரவரி 7 முதல் 9 ஆம் தேதி வரை மூன்று நாட்கள் பாட்னாவில் நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கு "தொழில்நுட்பம் முன்னேற்றம் மற்றும் வேலைவாய்ப்புப் பிரச்சினைகள்" என்ற தலைப்பில் நடத்தப்பட்டது.

இப்பொருண்மை தொடர்பாக ஏராளமான அறிஞர்கள் ஆய்வறிக்கைகளை முன்வைத்தனர்.

தற்போதைய நான்காவது தொழில்நுட்பப் புரட்சிக் காலக் கட்டத்தில் மிக வேகமாக அறிவியல் தொழில்நுட்பம் முன்னேறி வருகிறது.

செயற்கை நுண்ணறிவு, 3டி பிரிண்டிங், மனித எந்திரங்கள், தானியங்கி தொழில் நுட்பம், தகவல் தொழில் நுட்பம் போன்றவை மனித வாழ்வில் மிகப்பெரும் முன்னேற்றகரமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. அவை மனித குலத்திற்கு மாபெரும் நன்மைகளை வழங்கி வருகின்றன. இத்தொழில் நுட்பங்கள் சமூக முன்னேற்றத்திற்கு பயனுள்ளதாக அமைகின்றன.

அதே சமயம், இத்தொழில் நுட்பங்கள் மனித குலத்திற்கு கேடு பயக்கும் வழிகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. ஏகாதிபத்திய நாடுகள் போருக்காகவும், பேரழிவு ஆயுதங்களை உருவாக்குவதற்காகவும் இத்தொழில் நுட்பங்களை மனித குலத்திற்கு எதிராகப் பயன்படுத்துகின்றன.

புதிய தொழில் நுட்பங்கள் பல புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கினாலும், இளைஞர்கள் மத்தியில் கடும் வேலை இல்லா திண்டாட்டத்தையும் உருவாக்கி வருகிறது.

வேலையின்மை பல்வேறு சமூகப் பொருளாதாரப் பண்பாட்டு பிரச்சனைகளை உருவாக்கி வருகின்றது. இவைப் பற்றி எல்லாம் இக்கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கிற்கு அகில இந்திய முற்போக்குப் பேரவையின் அகில இந்தியத் தலைவர் எம்.விஜயகுமார் தலைமை தாங்கினார். டாக்டர் சத்யஜித் குமார் சிங் துவக்கிவைத்தார்.

பொதுச் செயலாளர் அனில் ராஜிம் வாலே கருத்தரங்கின் நோக்கங்களை விளக்கினார்.

அகில இந்திய முற்போக்குப் பேரவையின் தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத், தேசிய துணைத்தலைவர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநிலப் பொருளாளர் டாக்டர் ஜி.இரமேஷ் மாநில நிர்வாகி டாக்டர் ஆர்.ஜெயசீலன், பாராமெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச் சங்கத்தின் அகில இந்தியத் தலைவர் பி.காளிதாசன், ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச் தூய்மைப் பணியாளர்கள் நலச் சங்கத்தின் மாநிலத் தலைவர் என்.எஸ்.செல்வராஜ், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் எஸ். சிவகுரு, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் விருதுநகர் மாவட்டச் செயலாளர் வ.நவநீதகிருஷ்ணன், பொறியாளர் என்.பார்த்தசாரதி, பேராசிரியர் காந்தி ராஜ், சமூகப் பணித்துறையில் முதுகலைப் பட்டம் பயிலும் மாணவர்கள் மாணவர் சஞ்சய் தலைமையில் நான்கு பேர் உட்பட 15 பேர் தமிழ்நாட்டிலிருந்து, இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் தமிழ்நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், டாக்டர் ஏ.ஆர்.சாந்தி டாக்டர் ஜி.இரமேஷ் ஆகியோர் தங்களது ஆய்வறிக்கைகளை முன்வைத்தனர்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா





**திருவண்ணாமலை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், கிளையூர் கிராமத்தில், புதிய கிளை கொடியேற்று விழா, கிளைச் செயலாளர் ஏழுமலை தலைமையில் நடைபெற்றது. செங்கொடியை கே.அப்துல் மஜீத் ஏற்றினார். இதில் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.எஸ். மாதேஸ்வரன், தாலுகா செயலாளர் எஸ்.சார்தார், ஒன்றிய நிர்வாகக் குழு தோழர்கள் எஸ்.ராஜா ஏ.ஏழுமலை, சி.குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஏ.பிரியா நன்றி கூறினார்.

**திருச்சி மாநகர்:** திருச்சி மாநகர் மேற்குப் பகுதி, கட்சி உறுப்பினர்கள் பங்கேற்கும், நூற்றாண்டு விழா வரலாறு சிறப்புப் பேரவை, பகுதிச் செயலாளர் இரா.சுரேஷ் முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. துணைச் செயலாளர் கே.முருகன் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் சிறப்புரையாற்றினார். கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.சிவா, மேற்குப் பகுதி மாதர் சம்மேளனச் செயலாளர் சுமதி உள்ளிட்டோர் உரையாற்றினார். ரவீந்திரன் நன்றி கூறினார்.

**சிவகிரி:** தென்காசி மாவட்டம், சிவகிரியில் கட்சியின் நூற்றாண்டு விழா பேரவைக் கூட்டம், லட்சுமணன் தலைமையில், பி.முத்து முன்னிலையில் நடைபெற்றது. இதில் சிபிஐ மாவட்டச் செயலாளர் தி.இசக்கித்துரை, நிர்வாகக் குழு உறுப்பினர் பி.பாலசுப்பிரமணியன், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் வி.ரஜோந்திரன், மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் சண்முகவடிவு, கவுன்சிலர் அருணாசலம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வாசுதேவநல்லூர்:** தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டுப் பேரவைக் கூட்டம், வாசு ஒன்றிய துணைச்செயலாளர் த.பாலவிநாயகர் தலைமையில் நடைபெற்றது. இதில் சிபிஐ மாவட்டச் செயலாளர் டி.இசக்கித்துரை, த.சுப்பையா, எம்.எஸ்.கிட்டப்பா, ப.வேலு, எம்.ரவிக்குமார், ஜெய கணேசன், எம்.வேல்ச்சாமி, சிவஞானபாண்டியன், பா.ஜெய கணேசன், பாலசுப்பிரமணியன்,

மணிகண்டன், தங்கவேல், செந்தூர்பாண்டியன், மணிகண்டஸ்வரி, முத்தம்மாள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஏகாதிபத்திய சுரண்டல் வெறியும், பருவநிலை மாற்றமும்!



மு.வீரபாண்டியன்

இன்றைய உலக அரசியலில் சூழலியல் குறிப்பிட்ட பங்காற்றுகிறது. சூழலியலை காத்து அடுத்த தலைமுறையின் கையில் அளிப்பது மானுடத்தின் மகத்தான அரசியல் என மார்க்சியம் பிரகடனப்படுத்துகிறது. நிகழ்கால உலகமும், பிரபஞ்சம் யாவும் பருவநிலை மாற்றத்தால் முற்றிலும் சீரழிகிறது. காற்று, நீர், நிலம், வளிமண்டலம், விண்வெளி, கடல் பவளப்பாறைகள் என யாவும் மாசுபட்டு பாதிக்கப்பட்டுள்ளன. பருவநிலை மாறுகிறது. எனவே புவியைப் பாதுகாப்பது இப்போது மேற்கொள்ள வேண்டிய பிரதானமான முதன்மையான அரசியல்.

முதலாளித்துவ அறிஞர்கள் தனிமனிதர் மீது குற்றம் சுமத்துகிறார்கள். இயற்கை அழிவதற்கு தனிமனித செயலும் காரணமாக உள்ளன. மனித அசுத்ததாலும், புவி மற்றும் கடல், விண்வெளி என மனிதன் ஆதிக்கம் வளர்வதாலும் இயற்கை சமன் பாதிக்கப்படுகிறது.

மனிதன் தேவைக்கு மீறி அளவில் இயற்கைக்கு ஒவ்வாத பொருள்களை பயன்படுத்துகிறான். குப்பை போடுகிறான், கடலில் கழிவுகளை கொட்டுகிறான், தண்ணீரை வீணாக்குகிறான், வாகன புகையை மூட்டுகிறான், இப்படி தனிமனித செயல்கள், தனிமனித ஆதிக்கம் தான் பருவநிலை மாற்றத்திற்கு முதன்மைக் காரணம் என்றும், எனவே முழு பொறுப்பு மனிதன், அதிலும் தனி மனிதன். எனவே இந்த யுகம் தனிமனித ஆதிக்க யுகம் என்கிறார்கள் முதலாளித்துவ அறிஞர்கள், இயற்கை ஆர்வலர்கள்.



ஆனால், அது உண்மையா? புவிக்கோள், விண்வெளி, பிரபஞ்சம்யாவும் குறிப்பாக மலைகள், காடுகள், கடல்கள் என மூலதன லாப வெறியால் சூறையாடப்படுகிறது. இதனால் தான் இயற்கை அழிகிறது. பருவநிலை மாறுகிறது. புகை வெளியிடும் மாபெரும் அலைகள் அல்லது அணு ஆயுதங்கள், கடல் மீது கடல் வீசப்படும் ஆபத்தான போர் கருவிகள், ஒத்திகை ஆயுதங்கள், லேசர் ஆயுதங்கள், விண்வெளி ஆதிக்கம் முயற்சிகள் யாவுமாக சேர்ந்து இயற்கையை சீரழிக்கிறது. பருவநிலையை மாற்றுகிறது. இதனை தான் உலக இடது இயற்கை ஆய்வாளர்கள், இது மூலதன ஆதிக்கம் என்கிறார்கள்.

தனிமனிதனின் சிறு சிறு இயற்கை ஒவ்வாத செயல்களால் பருவநிலை பாதிக்கிறது என்பதைவிட ஏகாதிபத்திய லாப வெறியால், யுத்த வெறியால் இயற்கை சமநிலை பாதிக்கப்படுகிறது. புவி மண்டலத்தின் சமச்சீர் அழிகிறது. பருவநிலை மாறுகிறது, இங்கு முதன்மையான குற்றவாளி முதலாளித்துவ லாப வெறி தான்.

வரலாற்றில் இயற்கை மீதான முதல் தாக்குதல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் துவங்கி வைக்கப்பட்டது. சாக்ஷோ ஆங்கிலேயர்கள் தான் அமெரிக்காவில் உள்ள செவ்விந்திய மலைகளை கைப்பற்றினார்கள். கண்டுபிடிக்கப்பட்ட சிறிய பீரங்கிகள் மூலம் செவ்விந்திய மலைகளில் தகர்த்தார்கள், இவ்வாறு முதலாளிகள் தகர்த்த மலை "பிளாக் ஹில்ஸ்." இங்குதான் தங்கம் அதிகம் இருந்தது. இதனை வெட்டி எடுக்க வெள்ளை முதலாளிகள் செவ்விந்திய பூர்வ குடிகள் மீது நடத்திய போர் தான் "தி லாஸ்ட் லேண்ட் வார்" என்று வரலாற்றில் அறியப்படுகிறது. அன்று துவங்கி இன்று வரை ஆப்பிரிக்காவில், மத்திய கிழக்கில் போர் தொடுப்பது, அடிமைப்படுத்துவது தொடர்கிறது. இத்தகைய லாப வேட்டை தான் பருவநிலை மாற்றத்திற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக உள்ளது.

சிறிய காசாவின் மீது இஸ்ரேல் போட்ட அமெரிக்க வெடி மருந்துகள் மட்டும் 6 ஆயிரம் டன், இதுபோல 300 டன் ஆயுதங்கள் வெடி மருந்துகள் வியட்நாம் மீது வீசப்பட்டது. இதில் "நாபாம்" குண்டுகளும் அடக்கம். வியட்நாமை விட 3 ஆயிரம் மடங்கு தீமை தரும் அணுகுண்டுகள் ஜப்பான் மீது போடப்பட்டன. இப்படி கிடைக்கும் வழிகளில் எல்லாம் ஆதிக்கம் செய்து மனிதர்களுக்கு மட்டுமல்ல இயற்கைக்கும் பெரிய ஆபத்தாக ஏகாதிபத்தியம் மாறியுள்ளது. இதுவே சோவியத் இல்லாத உலகத்தின் நிலை.

வரலாற்றில் நீண்ட நெடுங்காலம் இயற்கை மீது ஆதிக்கம் செய்யும் மூலதன ஆதிக்க யுகத்திற்கு மாற்றாக புதியதோர் சோசலிச யுகம் எழட்டும். இதற்கான புதிய சிந்தனைகள் மலரட்டும் !!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில்

# மாவட்டத் தலைநகர்களில் பட்ஜெட் நகல் எரிப்புப் போராட்டம்

ஒன்றிய அரசின் பட்ஜெட்டைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாவட்டத் தலைநகர்களில் பிப்ரவரி 8ல் பட்ஜெட் நகல் எரிப்புப் போராட்டம் நடைபெற்றது.

ஒன்றிய அரசின் நிதியமைச்சர் 2025 26 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார். இந்த அறிக்கையில் "தமிழ்நாடு" என்ற வார்த்தைகூட இடம் பெறக் கூடாது என்ற வன்மம் தொடர்ந்து இரண்டாவது முறையாக வெளிப்பட்டுள்ளது. கூட்டாட்சிக் கோட்பாடுகளில் உறுதி காட்டி, மாநில உரிமைகளை நிலைநாட்ட தமிழ்நாடு எடுத்து வரும் முயற்சிகளை நிதிநிலை அறிக்கை முற்றாக நிராகரித்து, புறக்கணித்துள்ளது. அரசியல் காரணங்களை மனதில் கொண்டு தமிழக மக்கள் வஞ்சிக்கப்பட்டு வருகிறார்கள். இதைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாவட்டத் தலைநகர்களில் பிப்ரவரி 8 இல் பட்ஜெட் நகல் எரிப்புப் போராட்டம் நடைபெற்றது.

**விருதுநகர்:** விருதுநகர் தேசப்பந்து மைதானத்தில், கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ தலைமையில், மாநிலக்குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், பாலமுருகன், மாவட்ட துணைச் செயலாளர் சமுத்திரம், மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், இடைகமிட்டிச் செயலாளர்கள் கோவிந்தன், சக்கணன், செல்வம், சுவாமிநாதன், முனியசாமி, கலைவாசன், ஏஐடியுசி பாண்டியன், தங்கராஜ், மாதர்சங்க பாண்டிச்செல்வி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இராஜபாளையத்தில் மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி தலைமையில், வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி, பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, ஏஐடியுசி வி.இரவி, இடைக்கமிட்டிச் செயலாளர்கள் கணேசமூர்த்தி, இராமச்சந்திரன், பலவேசம், விஜயன், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் பகத்சிங் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி:** தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம் தலைமையில், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எஸ்.தேவராசன், க.பாரதி, மாவட்ட துணைச் செயலாளர்கள் கா.சி.தமிழ்க்குமரன், எம்.மாதேஸ்வரன், மாநிலக் குழு உறுப்பினர்கள் எஸ்.சின்னசாமி, எஸ்.கமலாமூர்த்தி ஆகியோர் பேசினார்கள்.

**கன்னியாகுமரி:** குமரியில் கட்சியின் மாவட்டச் செயலாளர் தா.சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில், மாவட்ட துணைச் செயலாளர் சுரேஷ் மேசியதாஸ், மாதர் சம்மேளனத்தின் மாவட்டச் செயலாளர் செல்வராணி, மாவட்டக் குழு உறுப்பினர் வி.அருள்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

**தேனி:** தேனி நேரு சிலை அருகில் மாவட்டச் செயலாளர் கி.பெருமாள் தலைமையில், மாவட்ட துணைச் செயலாளர் வே.பரமேஸ்வரன் மாவட்டப் பொருளாளர் எம்எஸ் பி.ராஜ்குமார், மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் இரா.தமிழ் பெருமாள், வீ.பாண்டி எம்.தனலட்சுமி மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**மயிலாடுதுறை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், மயிலாடுதுறை தலைமை தபால் அலுவலகம் முன்பு, மாவட்டச் செயலாளர் அ.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது.

**தூத்துக்குடி:** கோவில்பட்டி இனாம் மணியாச்சி விலக்கில், கட்சியின் தாலுகா செயலாளர் பாபு தலைமையில், மாவட்டச் செயலாளர் கரும்பன், கயத்தாறு ஒன்றியச் செயலாளர் பொன்னுச்சாமி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சேதுராமலிங்கம், மாவட்ட துணைச் செயலாளர் பாலமுருகன், நகரச் செயலாளர் சரோஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**அரியலூர்:** அரியலூர் அண்ணா சிலை அருகில், கட்சியின் மாவட்டச் செயலாளர் சொ.ராமநாதன் தலைமையில், அரியலூர் ஒன்றியச் செயலாளர் து.பாண்டியன், திருமானூர் ஜி.ஆறுமுகம், ஜெயங்கொண்டம் ஒன்றியச் செயலாளர் சு.மணிவண்ணன், செந்துறை கே.சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில், ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் டி.தண்டபாணி சிறப்புரையாற்றினார்.

**நாமக்கல்:** நாமக்கல் பூங்கா சாலையில், மாவட்டக் குழு உறுப்பினர் பி.கார்த்திக் தலைமையில், கட்சியின் மாவட்டச் செயலாளர் க.அன்புமணி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.சுகுமார், ஏஐடிஆர்எம் தேசிய கவுன்சில் உறுப்பினர் எஸ்.ராமகிருஷ்ணன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆர்.குழந்தான், டி.என்.கிருஷ்ணசாமி மற்றும் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் பி.தனசேகரன் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்தார்.

**கள்ளக்குறிச்சி:** கள்ளக்குறிச்சி பேருந்து நிலையத்தின் அருகில், கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.இராமசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திண்டுக்கல்:** திண்டுக்கல்லில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன் தலைமையில், மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.கணேசன், சந்திரசேகரன், ராஜாமணி, ஏஐடியுசி கௌரவ தலைவர் துரை.சந்திரமோகன், திண்டுக்கல் மாநகரச் செயலாளர் பெ.கிருஷ்ணசாமி, துணைச் செயலாளர்கள் சுப்பிரமணி, பிச்சைமணி, மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் சாந்தி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**திருநெல்வேலி:** நெல்லை சந்திப்பு ரயில் நிலையம் முன்பு, மாவட்டச் செயலாளர் ஆர்.சடையப்பன் தலைமையில், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஆர்.ரெங்கன் துவக்கி வைத்தார். ஏஐடியுசி மாநிலத் தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன் விளக்கவுரை ஆற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் சேதுராமலிங்கம், மாவட்ட விவசாயச் சங்க தலைவர் எஸ்.வி.கிருஷ்ணன், ஆகியோர் உரையாற்றினார்கள். மாவட்ட துணைச் செயலாளர் கே.முத்துகிருஷ்ணன், மாவட்டப் பொருளாளர் பி.முருகன் உள்பட திரளானோர் கலந்து கொண்டனர்.

**புதுக்கோட்டை:** புதுக்கோட்டை திலகர் திடலில், கட்சியின் புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் த.செங்கோடன் தலைமையில், மாவட்ட துணைச் செயலாளர் கே.ஆர்.தர்மராஜன், மாவட்டப் பொருளாளர் என்.ஆர்.ஜீவானந்தம் ஆகியோர் முன்னிலையில் போராட்டம் நடைபெற்றது.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் எதிரில், கட்சியின் தஞ்சாவூர் தெற்கு மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி தலைமையில், கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் கோ.சக்திவேல், மாவட்டப் பொருளாளர் கோ.பாஸ்கர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சோ.பாஸ்கர், ஆர்.இராமச்சந்திரன், ம.விஜயலட்சுமி, டி.கண்ணகி, தி.திருநாவுக்கரசு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தென்காசி:** தென்காசியில் கட்சியின் மாவட்டச் செயலாளர் டி.இசக்கித்துரை தலைமையில் ஏஐடியூசி பொதுச்செயலாளர் சுப்பையா, சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் வேலாயுதம், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பரமசிவன், அந்தோணிராஜ். மாவட்டக் குழு உறுப்பினர்கள் சிவசுப்பிரமணியன், பழனிச்சாமி, ஐயப்பன், மாரியப்பன், கிருஷ்ணன், சின்னச்சாமி, ராஜேந்திரன், கணேசன், பழனிமுருகன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வேலூர்:** வேலூரில் மாவட்டச் செயலாளர் ஜி.லதா தலைமையில், மாவட்டக் குழு உறுப்பினர்கள் எல்.மணி, எஸ்.காவேரி, ஜீவா, பன்னீர்செல்வம், மூர்த்தி, அருண்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

குடியாத்தம் புதிய பஸ் நிலையம் அருகில், மாவட்டக் குழு உறுப்பினர்கள் எஸ்.மகேஷ்பாபு, கே.கல்பனாசந்தர், வே.குமார், இரா.பிச்சமுத்து தலைமையில், மாவட்ட துணைச் செயலாளர் துரை செல்வம் மாவட்ட நிர்வாகக் குழு மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.சி.பிரேம்குமார், டி.ஆனந்தன் கண்டன உரையாற்றினர்.

**திருச்சி:** மணப்பாறை ஒன்றியம் புத்தாநத்தம் கடை வீதியில், கட்சியின் ஒன்றியக் குழு உறுப்பினர் சிராஜுதீன் தலைமையில், ஏஐடியுசி போக்குவரத்துக் கழகம் சுப்ரமணியன், கட்சியின் திருச்சி புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி, நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன், நகர துணைச் செயலாளர் திருநாவுக்கரசு, ஒன்றிய துணைச் செயலாளர் ராஜேந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

**ராமநாதபுரம்:** ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி காந்தி சிலை முன்பு, நகரச் செயலாளர் கே.ஆர்.சுப்பிரமணியன் தலைமையில், ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் என்.கே.ராஜன், கைத்தறி சம்மேளன மாநிலத் தலைவர் எஸ்.பி. ராதா, விவசாயச் சங்கத் தலைவர் கே.ஜீவா, ஜி.லோகநாதன், பி.சண்முகராஜன் ஸ்டாலின், முதுகுளத்தூர் எஸ்.ஜெயசீலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பட்ஜெட் நகல் எரிப்புப் போராட்டம்


























AIKS

■ வேளாண் பொருள்களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலையை 50% உயர்த்திட..
■ காவிரி நதிநீர்ப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண..



## தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில 27 வது மாநாடு

◆ நாள்: 2025, பிப்ரவரி 20, 21 ◆ இடம்: டாக்டர் வே. துரைமாணிக்கம் நினைவரங்கம்,
அதுல்குமார் அஞ்சான் நுழைவாயில், காவேரி திருமண மண்டபம், நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர்.

**இராஜன் கில்சி சாகர்** அகில இந்தியத் தலைவர்.
**இரா.முத்தரசன்** மாநிலச் செயலாளர், சி.பி.ஐ.
**கோ.பழனிச்சாமி** முன்னாள் எம்.எல்.ஏ.
**வை.சிவபுண்ணியம்** முன்னாள் எம்.எல்.ஏ, தேசியக் குழு.
**வை.செல்வராசு** நாகை நாடாளுமன்ற உறுப்பினர்.
**க.மாரிமுத்து** திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர்.
**கே.உலகநாதன்** முன்னாள் எம்.எல்.ஏ.
**முத்து உத்திராபதி** தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர், சி.பி.ஐ.
**மு.அ.பாரதி** தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர், சி.பி.ஐ.

**படத்திறப்பு**

| | | |
|---|---|---|
| பி. சீனிவாசராவ் | - | துரை சண்முகம் |
| எம். காத்தமுத்து | - | த. கண்ணப்பா |
| டாக்டர் வே.துரைமாணிக்கம் | - | எம்.கே. ஆறுமுகம் |
| எம். ஆதிமூலம் | - | வி.மா.வீரப்பன் |
| அதுல்குமார் அஞ்சான் | - | சா.மு. தர்மராசு |

**எஸ்.குணசேகரன்** மாநிலத் தலைவர்.
**பி.எஸ்.மாசிலாமணி** பொதுச் செயலாளர் (பொ).
**எம்.இலகுமய்யா** மாநிலத் துணைத் தலைவர்.
**சி.எம்.துளசிமணி** மாநிலத் துணைத் தலைவர்.
**த.இந்திரஜித்** மாநிலத் துணைச் செயலாளர்.
**எஸ்.நல்லையா** மாநிலத் துணைச் செயலாளர்.
**இரா.முல்லை** தேசியக் குழு
**மு.மாதவன்** தேசியக் குழு
**பா.பாலசுந்தரம்** மாநில நிர்வாகக் குழு
**வீர மோகன்** மாநிலக் குழு.
**இரா.ராமச்சந்திரன்** தஞ்சை மாவட்ட தலைவர்.
**சோ.பாஸ்கர்** தஞ்சை மாவட்டச் செயலாளர்.
**எஸ்.செல்லவேல்** மாநிலக் குழு.

கொடியேற்றம், தியாகிகளுக்கு அஞ்சலி,
கருத்தரங்கம், தீர்மானங்கள்,
நிர்வாகக் குழு தேர்வு

ஜனசக்தி
JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

### பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் கோரி

# டாஸ்மாக் பணியாளர்கள் காலவரையற்ற காத்திருப்பு போராட்டம் இரா.முத்தரசன் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது

தமிழ்நாடு அரசு கடந்த 2003 ஆம் ஆண்டில் இருந்து சில்லறை மதுபான வியாபாரத்தை நேரடியாக மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் சில்லறை மதுபான வியாபாரப் பிரிவுக்கு 34 ஆயிரம் பணியாளர்கள் ஒப்பந்தப் பணியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டனர். கடந்த 21 ஆண்டுகள் பணித் தொடர்ச்சி இருந்தும் பணி பாதுகாப்பற்ற பணிச் சூழலில் பணி புரிந்து வருகின்றனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளனர்.

தற்போது பணி நிரந்தரம், அரசுப் பணியாளர்களுக்கு இணையான ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று 11.02.2025 ஆம் தேதி தலைமைச் செயலகம் முன்பு காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்து இருந்தனர்.

கடந்த 2024 அக்டோபர் 2 ஆம் தேதி டாஸ்மாக் பணியாளர்கள் முன் வைத்த கோரிக்கைகள் மீது அரசு தரப்பில் சுமூக தீர்வு காண முயற்சி எடுப்பார்கள் என எதிர்பார்த்தனர். கடந்த நான்கு மாதங்களாக மாவட்டத் தோறும் போராட்ட ஆயத்த மாநாடுகள் நடத்தப்பட்டன.

11.02.2025 காலை 10 மணிக்கு தொங்கு தோட்டச்சாலை அருகில் டாஸ்மாக் பணியாளர்கள் திரண்டு சங்கத் தலைவர் நா.பெரியசாமி முன்னாள் எம்.எல்.ஏ தலைமையில் தலைமைச் செயலகம் செல்ல முயற்சிக்கும் போது, காவல்துறையினர் தடுத்து கைது செய்யப்பட்டு, அண்ணா கலையரங்கிலும், திருவல்லிக்கேணி அரசு சமுதாயக் கூடத்திலும் கைது ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் அடைத்து வைத்தனர்.

போராட்டத்தை தொடக்கி வைத்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், ஆதரித்து பேசிய ஏஐடியூசி தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி, தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.தனசேகரன், விடுதலை சிறுத்தைகள் தொழிலாளர் முன்னணி பொதுச் செயலாளர் இ.முத்துபாண்டி, தமிழ்நாடு அரசு டாஸ்மாக் பணியாளர் சங்கத் தலைவர் ஏ.இ.பாலுசாமி, தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள், உதவி விற்பனையாளர் மற்றும் பணியாளர்கள் சங்கப் பொதுச் செயலாளர் மாரியப்பன், அகில இந்திய பார்வாட் பிளாக் தொழிலாளர் சங்கத்தின் மாநிலத் துணைச் செயலாளர் மாயாண்டி உட்பட ஆயிரத்துக்கும் அதிகமான பணியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். போராட்டத்திற்காகப் புறப்பட்ட டாஸ்மாக் பணியாளர்கள் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் வழிமறித்து கைது செய்யப்பட்டுள்ளனர். பலர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

இப்படிப் போராடும் ஜனநாயக உரிமைகளை மறுக்கும் தமிழ்நாடு காவல் துறையின் நடவடிக்கைகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. டாஸ்மாக் பணியாளர்களின் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளில் தீர்வு காண வேண்டும். இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் உட்பட கைது செய்யப்பட்ட டாஸ்மாக் பணியாளர்கள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.

டாஸ்மாக் பணியாளர்களின் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் குறித்துப் பேசலாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நேற்று 11.02.2025 ஆம் தேதி மாலையில் டாஸ்மாக் மேலாண்மை இயக்குநர் அலுவலகத்தில் நடந்த பேச்சுவார்த்தையின் போது, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அளித்த உறுதிமொழியை ஏற்று, காலவரையற்ற காத்திருப்புப் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.








Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: T.M.Murthi,
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.